தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் ! "

ஆண்டு சந்தா ரூ. 6—0—0
6 மாதச் சந்தா ரூ. 3—0—0

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 1 | சென்னை | 14—5—55 | சனிக்கிழமை | இதழ் 46

★ மீஞ்சூர் மோகனம்! ★

நாட்டிலே புரட்சி அரும்பு விடு கிறதே !

எல்லாம் நன்மைக்கே !

மகன் கூத்திக்கள்ளனுகி விட்டானே மகராஜா !

எல்லாம் நன்மைக்கே !

அரசகுமாரிக்கு விஷஜுரமாமே !

எல்லாம் நன்மைக்கே !--இப்படி ஒரு பாட்டி கதை உண்டு தமிழ் நாட்டில். தூங்காமல் துடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு சாகாமல் செத்துக்கொண்டிருக்கும் பாட்டிமார் சொல்லுகின்ற கதை அது ! அந்தக் கதையின் இறுதிக் கட்டம் இன்பியலில் முடிகிறது ; ஆனுல் நமது ஆட்சியாளர்கள் நடித்திக் காட்டுகின்ற 'எல்லாம் நன்மைக்கே, என்ற நாடகம் துன்பத்தில் முடியப்போகிறது. 'மந்திரி மாதிரி' உள்ள நமது சென்னை மந்திரிமார்கள் கொஞ்சகாலமாக, தாங்கள் செய்யும் கொடுமைகளுக்கு, புதுவிதமான பரிகாரம் தேடிவருகிருர்கள், எல்லாம் உங்கள் நன்மைக்குத்தானென்று ! மக்கள் இது கேட்டு, மந்திரிகளைத் தட்டிக் கொடுப்பார்களென்று அந்த 'கனம்'கள் கனவு காண்கின்றனர். பரிதாபம் ! பரிதாபம் !

அண்மையிலே தென்னத்தில் சுற்றுப்பயணம் செய்துவந்த கனம் பக்தவத்சலம் அவர்கள் கலந்து கொண்ட வைபவங்களிலெல்லாம், **'நாங்கள் வரிப்போடுவதுமக்களின் நன்மைக்கே'** தான் என்று பேசித் தீர்த்திருக்கிருர். பரம்பரைப் பணக்காரன் சுரண்டல் அவசியம் என்று பேசினுல், அதில் அர்த்தமுண்டு, ஊரிப்போன மட்டை என்று நாம் ஒதுக்கித் தள்ளிவிடலாம்; ஏழையாகவே இருந்து, ஏழையாகவே வாழ்ந்து, எதிரி அயர்ந்த நேரத்தில் பணப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தவன், தன்னுடைய பழைய நிலையை மறந்து, வியர்வை வடித்த காட்சியையும், வினை எழுப்பிய காலத்தையும் நெஞ்சை விட்டு அகற்றிவிட்டு சுரண்டல் நன்மைக்கே தான் என்ருல் சுரண்டப்படுகிறவர்களுக்கு ஆத்திரம் வருமா வராதா? ஏன் வரக்கூடாது ? வெள்ளைக்காரர்கள் வரி விதித்த நேரத்தில், 'அட்டைமனம் படைத்த வெள்ளையனே வெளியேறு' என்று கூப்பாடு போட்டவர்கள் இந்த 'சாக்குத் துணி' குல்லாக்காரர்கள். வெளிநாட்டுக்காரன் என்ற காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு அந்த வெள்ளையர் செய்த நன்மைகளுக்கு திரையிட்டு மறைத்த கறைபடிந்த உள்ளத்தினர் இவர்கள். வெள்ளையர் வாங்கிய வரிக்கு, அவன் கட்டி வைத்துச் சென்ற கட்டிடங்கள் இவர்களின் களங்கமுள்ள கருவிழிகளில் படவில்லை. அவர்கள்வாங்கிய வரிகளுக்கு அவர்கள் செய்துவைத்துப் போன நலன்கள் இவர்களின் மாசடைந்த உள்ளங்களுக்குப் புலப்படவில்லை. வரி வாங்குவது எல்லாம் நன்மைக்கேதானும் ! இந்தப் பதில் அப்போது எங்கே? மீஞ்சூரார் சொல்வாரா ?

வரி வாங்குவது நன்மைக்கே என்று வைத்துக்கொண்டாலும், இதுகாறும் வாங்கிய வரிக்கு செய்த நன்மைகள் என்ன ? வெள்ளையருவது அந்நியன்--அவன் செய்துவிட்டுப்போன சாதகங்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் ஆயுட்காலத்தோடு போட்டிபோட்டு நிற்கின்றன. ஆனுல் இந்தத் திருவாளர்கள் என்ன செய்தார்கள். வரியை வாங்கி டெல்லிக்கு வாரி ஈந்ததைத் தவிர வேறு என்ன செய்திருக்கிருர்கள் இவர்கள் ? அதுவும் குடியரசு சர்க்கார் ! இந்த இலட்சணத்தில் இன்னும் பத்தாண்டுகளில் வேலையில்லா திண்டாட்டம் ஒழிக்கப்படும் என்று வேறு பேசியிருக்கிருர் கனம் - பத்துலட்சம் ! பத்தாண்டுகள் ! அப்பப்பா எவ்வளவு ஆசை மந்திரியாருக்கு ! இன்னும் பத்தாண்டுகள் தென்னுட்டில் காங்கிரஸ் நிலைக்குமென்றல்லவா கருதுகிருர் ! வேலையில்லா திண்டாட்டத்தை ஒழித்துவிடுவார்களாம் இன்னும் பத்து வருஷம் கழித்து ! அதாவது எப்போது? மக்கள் அலைவரும் கொடுமை தாங்காது செத்த பிறகு ! தாலிகளையும், கூலிப்பணத்தையும்கொட்டியழுது ஒட்டி உலர்ந்து மடிந்து இந்த நாடு சுடுகாடான பிறகு ! ஜனத்தொகை குறைந்து பிறகு இவர்கள் வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்கிருர்களாம் !

புரட்சிக்கவிஞர் 'தென்றல்' அலுவலகம் வந்தகாலை---
கண்ணதாசன்-புரட்சிக்கவிஞர், எத்திராசன்.

பத்து வருஷங்கள் ! கொடுமை ! கொடுமை ! வரண்ட பாலைவனத்தைக்கூட ஐந்தாண்டில் சோலையாக்கும் வசதி பெருத்துவிட்ட இந்த நாளில், நல்ல வருமானத்தைத் தரக்கூடிய நாட்டைச் சிரிப்படுத்த இருபது ஆண்டுகளா ? தூங்கிப் பொழுது போக்கத்தான் இந்தக் காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியுமா? வெட்கமய்யா வெட்கம் ! வெளியே சொன்னுல் வெட்கம் ! உச்சி வெயிலிலே மோகனம் பாடுகிருர் மீஞ்சூரார் சுவைப்போர் யாரோ ?

தேர்தல் வரப்போகிறதல்லவா ! இனி தேனுமிர்த கானமாகத் தானிருக்கும் அமைச்சர்களின் சொற்பொழிவுகளெல்லாம் !

இன்னும் இருபதே மாதங்கள் ! ஆமாம், தேர்தலுக்கு இன்னும் இருபது மாதங்கள்தான் இருக்கின்றன. சுவைகண்ட பூனைகளின் சுறுசுறுப்பே இதை நமக்கு எடுத்துரைக்கின்றன. ஒரு சிலர் எம். எல். ஏ. வாக வந்த பிறகு கட்டிய புதுவீட்டைக்கூட வாடகைக்கு விட்டு விட்டு, தனது தொகுதியிலேயே வாடகைக்கு வீடுபார்க்கத் தலைப்பட்டுவிட்டார்களாம் ! வருமுன் காக்கும் வரையோடுகள் இந்த ஆண்டு நிச்சயம் மண்கவ்வத்தான் போகிருர்கள். ஏமாந்த வாக்காளர்கள் ஏமாந்துகொண்டேயா இருப்பார்கள் காலமெல்லாம் ! அதுபோகட்டும் !

பாழாய்ப் போன இந்த நாட்டில் அரசியலுக்கு யார் லாயக்கு என்ற வரைமுறையே கிடையாதா ? 'யாமொன்றும் அறியோம் பராபரமே' போடுகிற பண்டாரங்களுக்குக் கூட 'சீட்' வேணுமாம் சட்டசபையிலே ! இந்த 'கேடுகெட்டது'களுக்கு மூவாசை துறந்த முனிவர்கள் என்ற பட்டம் வேறு ! சூலாயுதத்தையும் வேலாயுதத்தை[illegible] நம்பி, 'அரகரா நமப்பார்வ[illegible] போடுகிற அன்னக்காவடிகள் [illegible] தலில் நிற்கப் போகிருர்க[illegible] தெருவல்லாம் முழங்கித் தி[illegible] கள் !

(அடுத்த பக்கம் [illegible])

பிரதமர் பேசினர்! பிணம் சாய்ந்தது!

அதுவும் நாஸ்திகர்களை எதிர்த்து நிற்கப்போகிருர்களாம்! யார் அந்த நாஸ்திகர்கள் என்று அந்தப் பண்டாரங்கள் சொல்லவே இல்லை! எங்களது வாதப்படி நாஸ்தீகர்கள் என்போர், ஆண்டவன் பெயரைச் சொல்லி அட்டகாசங்கள் புரியும் 'வேதாந்தக் குடுக்கை'கள்தாம்! அப்படியானல் பண்டாரத்தார்-- அவர்தான் குன்றக்குடிச் சாமியார் பார்ப்பனர்களை எதிர்த்து நிற்கப் போகிருரா அல்லது பண்டாங்களுக்குள்ளேயே போட்டி நிகழப்போகிறதா என்று தெரியவில்லை.

ஒருவேளை 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பது தான் நாத்தீகம் என்று எண்ணி, அந்த லட்சியத்திற்காகப் பாடுபடும் நம்மைத் தான் பண்டாரத்தார் 'நாத்தீகர்' என்று கருதி போட்டிபோட நினைக்கிருரா? பாவம்! ஆசை வெட்கமறியாது போலும்! நான் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று மக்களுக்குச் சொல்லி ஓட்டுப்பெற முடியாவிட்டாலும், நம்மைத் திட்டியாவது ஓட்டுப் பெறலாமென நினைக்கிருர் தெய்வசிகாமணித் துறவியார். முதலில், பார்ப்பன முகாமிலிருந்து அவர் மீது புதிதாகத் தொடுத்திருக்கும் கணைகளைத் தடுத்துப் பார்க்கட்டும்! தமிழிலே மந்திரம் கூடாது என்ற அர்ச்சகர்களின் மாநாட்டுத் தீர்மானத்தை அடிகளார் முதலிலே கண்டிக்கட்டும். அந்த அர்ச்சகர்களைத்தான் பண்டாரத்தார் நாஸ்தீகர் என்று கருதினல் வேடத்தைக் கலைத்துவிட்டு இராயபுரம் நோக்கி ஓடிவரட்டும்! என்றும் நமது ஆசி உண்டு! ஆனல் அவர் 'திருச்சிற்றம்பலம்' என்பதற்குப் பதிலாக 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்கவேண்டும்.

★

வில்லங்கப் பண்ணை

பட்டம் மனைவிக்கு, பக்கத்தில் அமர்ந்து பாகுமொழி பேசும் இன்பராஜவாகவே இருந்தான் அவள் கணவன். அதற்கு ராணியல்ல காரணம், அந்த நாட்டு வாரிசு உரிமைச் சட்டம் அப்படிச் செய்துவிட்டது.

பள்ளியறையிலே ராணிக்கு ராஜா, ஆனல் பாராளுமன்றத்திலே, ராணிக்கு தன் கணவன் சாதாரணப் பிரஜை!

ஒருநாள், ராஜா கண்ணடி அறையில் உட்கார்ந்திருந்தார். கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. ராணியின் கணவன் தனித்திருக்கும் அறையை தட்...க்கூடிய தைரியம் யாருக்கு ...ரும்-ராணியைத்தவிர! ராஜா ... அறிந்து கொண்டார் ...ரிதான் கதவைத் தட்டு...ென்று! ராஜாக்களுக்கு ..., சல்லாபமிருக்காதா ... கொஞ்சம் விளையாண்டு பார்க்கலாமே என்ற சபலம் ராஜாவுக்கு! கேளாக் காதர்போல நடித்தார். மீண்டும் கதவு தட்டப்பட்டது.

"என்னங்க உங்களைத்தானே! எவ்வளவு நேரமாக கதவைத் தட்டிக்கொண்டு நிற்கிறேன் தெரியுமா? தர்பார் உடையை என்னல் தாங்கிக்கொண்டுநிற்கமுடியவில்லை கண்ணளா! கதவைத் திறங்கள், மணிமுடி உச்சியைத் தேய்க்கிறது" என்று பேசினளாம் கொஞ்சலாக! துணைவியைத் துன்புறுத்தி இன்பங்காண எண்ணினன்போலும் அந்தத்துரைமகன். அப்போதும் ஊமையாக இருந்தான். ராணிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. இருப்பதோ தர்பார் கோலத்தில், நிலைமையோ கெஞ்சல் படலம்! ஏன் இந்த நிலை என்று அவள் எண்ணினள். கண்ணளா என்று கேஞ்சியவள் கர்ஜிக்கத் தொடங்கினள். "யாரங்கே! இந்த நாட்டின் அரசி தட்டுகிறேன் கதவை! திறக்கிருயா? இல்லையா? உம்! திற!" என்று கட்டளை பிறப்பித்தாள். உள்ளே இருந்த ராஜா அலறி அடித்து ஓடிவந்து கதவையும் திறந்து கைகட்டி, வாய் பொத்தியும் நின்ருனும். இப்படி ஒரு கதை ஆங்கில நாட்டில் நடந்திருப்பதாக நூலகளிலே படித்திருக்கிரேம். ஆனல் இந்தக் கதையிலே ஒரு திருத்தம் செய்தது போல இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் சென்ற கிழமை நடைபெற்றிருக்கிறது. நாடாளும் நல்லவர்களுக்கு எத்துணை செல்வாக்கு இருக்கிறது என்பதற்கும், நிர்வாக இயந்திரங்கள் எப்படி உருளுகின்றன என்பதற்கும் அந்த நிகழ்ச்சி ஒன்றே சான்று போதும்.

டில்லி பாராளு மன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கு திடீரென்று மயக்கம் கண்டுவிட்டது. உறுப்பினர் கீழே சாய்ந்துவிட்டார். சபையின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு உறுப்பினர்கள் அனைவரும், மயக்கமபோட்டு சாய்ந்தவரைச் சூழ்ந்துவிட்டார்கள். போன் அடித்தது. மருத்துவரை உடன் வரும்படி ஆயிரமுறை போன் செய்யப்பட்டது. அவசரம், அவசரமென்று மெம்பர்களெல்லாம் துடித்திருக்கிருர்கள். கடைசியாக பண்டிதநேரு வேகையிலே போனை எடுத்தார். கர்ஜித்தார்! 'இந்தியாவின் 'பிரதம மந்திரி பேசுகிறேன்' என்று கர்ஜித்தார். மருத்துவர் வந்தபாடில்லை. மயக்கம் கண்ட உறுப்பினரும் இறந்துவிட்டார். இந்தக் கதை சரித்திரத்திலே படித்த கதையல்ல தோழர்களே! நடந்த கதை! பத்தாண்டுகளுக்கு முன்பல்ல! ஒரு கிழமைக்கு முன் டில்லியிலே நடந்த கதை! நிர்வாக இயந்திரத்தின் அச்சு என்று கருதப்படுகிற டில்லி நகரில் இப்படி ஒரு 'கொலை' நடந்திருக்கிறது. ஆம் இதை ஒரு கொலை என்று ஏன் சொல்லக்கூடாது. மருத்துவ இலாகாவின் சீரழிவும், அதைக் கண்காணிக்கும் இந்த நாட்டின் அரசு பீடமும்தான் அந்தக் கொலைக்குக் காரணமென்ருல் அது என்ன தவறு? மருத்துவர் உடனடியாக வந்திருந்தால் உறுப்பினர் பிழைத்திருக்கக்கூடும்! அவருடைய விதி, அவர் செத்தார் என்று சொன்னல் அது அரசியல் அயோககியதனத்தைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்.

மூன்று மாதங்களுக்கு முனபே, நாம் தென்றல் இதழில் தலையங்கம் தீட்டியிருக்கிரேம்; மருத்துவ இலாகாவில சர்க்கார் கவனக் குறைவாக இருக்கிறது; எல்லோரையும ஜீவாமிருதம சாப்பிட்டவர்களாக இநத சர்க்கார் கருதுகிறது; என்று அதிகாரிகள் பலர் நமமீது சீறி விழுந்தார்கள். விட்டேனு பார் என்ருர்கள். டில்லியில் நடந்த இந்தச் சாவுக் கதையைப் படித்த பின்பு அந்த 'மூன் கோபிகள்' என்ன நினைக்கிருர்களோ?

வெள்ளையர் நாட்டில், அதிகாரம், மனைவிக்குப் பணிய வைத்தது. கணவனை, இந்தக் குடியரசு நாட்டில், பிரதமர் அழைக்கிருர் மருத்துவர் இன்னும் வரவில்லை! அந்தோ பரிதாபம்! ராஜசுட்டமே!

◉

இலக்கியப் பரிசுகள்

முடிவு தேதி 31-6-55

(1) காவியப் போட்டி

நீதிபதிகள் :

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை
கவிஞர் வாணிதாசன்

(2) பெருங்கதைப் போட்டி

நீதிபதிகள் :

சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத்
புலவர் கா. அறிவழகன்
கா. பாண்டுரங்கன் எம். ஏ.

(3) நாடகப் போட்டி

நீதிபதிகள் :

ப. நீலகண்டன்.
சக்தி கிருஷ்ணசாமி

(4) இலக்கியச்சுவைப் போட்டி

நீதிபதிகள் .

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை
அருண்மொழி பி. ஓ. எல்.

குறிப்பு : எந்த ஒரு நூலும், அச்சுக்கணக்கில் 100 பக்கம் முதல் 120 பக்கம் வரை வருவதாயிருக்கவேண்டும். மற்ற விபரங்கள் முன்பு குறிப்பிட்டுள்ளதுபோலத்தான்.

[ஆ-ர்.]

எண்ணம்

கண்ணதாசன்

எதிர்ப்புகள் வந்தபோதும், எதிரிகளது கவண்வீச்சின் ரீங்காரம் காதுகளைத் துளைத்திட்டாலும், களங்கத்தை உருவாக்கி, நமது குடும்பத்தையே தள்ளிவைக்க திட்டங்கள் தீட்டியபோதிலும் நாம் வளர்ந்திருக்கிறோம்; ஏறுநடை தளராமல் ஆறு கல் கடந்திருக்கிறோம்; வாயடக்கி, நாட்டவரின் முன்னிலையில் நம்மையெல்லாம் பேயாக்கி வர்ணித்துப் பயம்காட்ட எத்தனித்த இந்த வையகத்தை ஆள்பவருக்கும், நமது உள்ளங்கள் வைரம் பாய்ந்தவை என்பதை மெய்ப்பித்துக் காட்டி, மேனிசிலிர்க்க வைத்துவிட்டோம். மாற்றாரின் மனவேதனை வளர்கிறது; நாம் மகிழ்வெய்தி பெருமை பாடுகிறோம். தி. மு. கழகம் வளர்ந்துகொண்டிருக்கிறது! ஏற்ற மிகுந்தோர் என தங்களைத்தானே எண்ணிக்கொண்டோர், எமை எதிர்க்க யாருளர் எனச் செருமிக்கொண்டோர், நேற்று மழையின் இன்றைய காளான் என்று நமக்கு ஜாதகம் கணித்தவர்கள் அத்தனைபேருமே இன்று நமது நாவோசைதான் தென்னாட்டின் சக்தி என்று முடிவு கட்டி அஞ்சி, அஞ்சிச் சாகின்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள். நெஞ்சு நெகிழ்ந்து நெக்கு நெக்காக உருகுகிறார்கள். தி. மு. கழகம் வளர்ந்துகொண்டிருக்கிறது!

மகுடி வைத்து மயக்குவதோ, மரத்தின் மறைவிலிருந்து சுருக்குப்போட்டுப் பிடிப்பதோ, தி: மு: கழகத்தின் புனிதமான வரலாற்றில் நிகழ்ந்தது கிடையாது. அத்துணை கண்ணியம்! நீதிமான்களே, ஒப்புக்கொள்ளத் தக்க அவ்வளவு கட்டுப்பாடு!

'வாலிபர்கள் நடத்துகின்ற இயக்கம்; இவர்களுக்கு எதிலும் வரைமுறை இருக்குமா என்பது சந்தேகம்தான்' எனப் பேசி வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொண்ட பூமான்கள், சீமான்கள் அத்தனை பேருமே பிரமிக்கத்தக்க புதியதோர் ஜனநாயகத்தை - உலகின் எந்த அரசியல் இயக்கமும் மலர வைக்கத் துணியாத புதுமலரை நறுமலரை நாம் மலரச் செய்திருக்கிறோம்; அந்த நறுமலரை மணம் வீசும் பொன் மலராக்கும் பணியை திருச்சி திருநகரம்-சோழமண்டலத்தின் பெருநகரம் ஏற்றுத் தொண்டாற்றுகிறது. கோழைகளின் நாக்கை நீருற்றுக்கி மூக்கிலே விரல் வைக்கச் செய்த முதல் மாநில மாநாட்டைநடத்திக்காட்டிய மறவர் பாசறையின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறப் போவது திருச்சியிலேதானே! தொடுத்தணை பாழாகாது, எடுத்த பணியில் தோல்வி காணாத தி. மு. கழகத்தின் அடுத்த தொண்டு இரண்டாவது மாநில மாநாடு! இந்த மாநாட்டின்மூலம், சுவையும், பயனும் அதிகம் பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கை நமக்கு மிகவுண்டு! முதல் மாநில மாநாட்டின் போது நாம் மழலைக்குழந்தைகள்-நம் இயக்கம் அப்போது பாலபருவம். இன்று நாம் வளர்ந்திருக்கிறோம். அண்ணா நம்மை வளர்த்துவிட்டிருக்கிறார். நமது இயக்கத்திற்கு இது மாநில மாநாடுதான் ஆனால் எந்த நாட்டு எதிர்க்கட்சியும் கண்டும் கேட்டுமறியாத, நானில மாநாடு! இது சொல்லலங்காரமல்ல; ஆள்வசதி, ஆதிக்க பலம் கொண்டோர் நடத்திய ஆவடி கண்டோர் எவரேனும் நமது முதல் மாநில மாநாட்டை - ஏழையர் கட்சி நடத்திய மாநில மாநாட்டைக் கண்டிருந்தால் நமது ஏற்பாட்டின் சீரும் சிறப்பும் அவர்களுக்குப் புலப்பட்டிருக்கும். அந்த வனப்பைக் காட்டிலும் இந்த முறை திருச்சியிலே வனப்புமிருந்திருக்கும். காரணம் வளம்சார்ந்த மண் திருச்சி! உளம்தேர்ந்த தீரர்கள் வரவேற்புக்குழுவினர். ஆனாலும், மாநாட்டுக்கு உயிரூட்டக்கூடிய பொறுப்பு ஊர்தோறும் இருக்கும் கிளைக்கழகங்களைச் சார்ந்தது என்பதைநாம் சொல்லத்தேவையில்லை.

ஏப்ரல் 24-பொதுக்குழுவில் ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் இரண்டாயிரத்திற்குக் குறையாமல் தருவதாக உறுதி கூறிவிட்டார்கள். உறுதிமொழியைக் கௌரவிக்கத் தவறுமாட்டார்கள் நமது செயலாளர்கள். அதிகம் தந்தாலும் மாநாட்டுப் பொருளாளராம் அறிஞர் அண்ணா ஏந்தியிருக்கும் இருப்புப் பெட்டி கொள்ளாமல் போகாது! உள்ளம் தோறும் நிலையைக்கூறி, இல்லம்தோறும் பணம் திரட்டி, மாநாட்டின் சிறப்புக்கு வழிவகை காணவேண்டும். பொருள் சேரவில்லையே என்ற எண்ணத்தை பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளங்களிலே அரும்புவிடச் செய்திடக்கூடாது. செல்வம் திரட்ட வேண்டும்; இயன்றதை உடனுக்குடன் தலைமை நிலையத்திற்கு அனுப்பிக்கொண்டே இருக்கவேண்டும். அறிந்தவர்கள், தெரிந்தவர்களைக் காண நேரம் காலம் பார்க்காதீர்கள். முழுநேர உழைப்பைத் தரக்கூடியவர்களும், உழைப்பின் ஒரு பகுதியை மாநில மாநாட்டிற்கு ஒதுக்கக்கூடியவர்களும் விடா முயற்சி எடுத்துக்கொண்டால் அந்த முயற்சி மாநில நாட்டின் வெற்றிக்கு பாதை வகுத்ததாகும்.

◉

தென்றல்

ஜூன் 18உ தென்றலின் இரண்டாவது ஆண்டு தொடக்கம்!

அதே இதழில் :

'கண்ணதாசன்'

எழுதும்

ராஜ தண்டனை

(நாடகம்)

—சுவைத்தமிழில் தொடரும். வரலாற்று சார்புடைய காதல் நாடகம்.

—பாவலன் மகனும் காவலன் மகளும் கொண்ட காதலை, கவிநயத்தோடு கூறும் நாடகம்.

—படிக்க... சுவைக்க... நடிக்க...

ஜூன் 18! எதிர்பாருங்கள்!

அதே இதழில்,

'காரை முத்துப்புலவர்'

மனித மனம்

என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்துகிறார். பயம், கோபம், விரக்தி, இன்னோரன்ன உணர்ச்சிகளின் பரிதாபத்தை ஆராய்கிறார். வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறுகிறார்! வேடிக்கைக் கட்டுரை!

அதே இதழில்,

சொல்லின் செல்வர்

ஈ. வே. கி. சம்பத்

எழுதும்

வாழ்வது எப்படியோ!

அருமையான ஆராய்ச்சி! அற்புதமான நடை!

ஜூன் 18! மறவாதீர்கள்!

திராவிடமக்களின் எழுச்சிமுரசம் 'தென்றல்'

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 9

ஈற்றடி : "இல்லையோ வெங்கட் கிடம்"

முடிவு தேதி 28-5-55

நீதிபதி : 'சகி' 'தென்றல்' சென்னை-6.

சிலம்பு வழங்கும் செல்வம்

தமிழக மறுமலர்ச்சிக்கு உதவிய ஏடுகளில் தலைசிறந்தது சிலப்பதிகாரமே. மறுமலர்ச்சியைப் புது மலர்ச்சி நோக்கிச் செலுத்தும் ஆற்றல் அதற்கு உண்டு. புதுமலர்ச்சிக்கு உரிய பல விதைகள், தூண்டுதல்கள் அதில் உள்ளன.

'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்ற வழக்குச் சொல் உலவிய காலம் ஒன்று இருந்தது. அது மலையேறி விட்டது. நைடதம் கொண்ட இடத்தை இன்று கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகிய ஏடுகள் கொண்டுள்ளன. அவை அமிழ்தமல்ல, மருந்தல்ல, ஔடதம்! அதுவும் பொதுமக்களுக்கல்ல, மாணவ இளைஞர், நங்கையர்க்கல்ல, புலவர்களுக்கு! இந் நிலையை மாற்றியமைத்த, இன்னும் மாற்றியமைக்க இருக்கிற ஏடு சிலப்பதிகாரமே.

புது வகையான தமிழ்

மற்ற ஏடுகளில் நாம் தமிழைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் முத்தமிழைக் காண்கிறோம். இது புதுவகையான தமிழ் -- தமிழர் முன் அறியாத தமிழ், வேறு எங்கும் காணாத தமிழ்! அதன் இசை தமிழர் காதில் புதுவகை மாயப் பண்ணுடன் இழைகின்றது.

மாசறு பொன்னே!
  வலம்புரி முத்தே!
காசறு விரையே!
  கரும்பே! தேனே!
அரும்பெறல் பாவாய்!
  ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெரு மட
  மகளே!

கோவலன் கண்ணகியை மலரணை அருகே கண்டவுடன் அவ் வணங்கின் பெயர் குறியாது அன்பு குறித்தழைக்கும் சொற்கள் இவை. ஒவ்வொரு அடியும் இங்கே உணர்ச்சியின் வளர்ச்சியை மட்டும் குறிப்பன அல்ல; கோவலன் கண்ணகியை நோக்கி அணுகிவரும் ஒவ்வொரு படியாக ஒவ்வொன்றும் இயங்குகின்றது. நான்காம் அடி கண்ணகியின் இடையிலே இழைவதற்காக வளையும் கோவலன் கைகளின் வளைவு குழைவையே இசைப் படம் பிடிக்கிறது என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

அணுகிவந்த கோவலனின் பாட்டுக்கள் அடுத்து வருகின்றன.

மலையிடைப் பிறவா
  மணியே என்கோ!
அலையிடைப் பிறவா
  அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா
  இசையே என்கோ!
...ழிரும் கூந்தல் தையால்!

...த அடிகளுக்கு உரை வேண் ... உரைநடையின் தெளிவு, ...த்தில் வரும் நடிகனின் ..., காவியச் சொற்களில் ... பொருள் நயம் அணி ...சயில் எழும் இனி ...ழந்து தாழ்ந்து தாழ்ந்து உயரும் ஓசை ஆகிய இத்தனையும் முயற்சி இல்லாமலே இவ் வழிகளில் அதிர்வதை உணரலாம். இன்னும் சிறிது உற்று நோக்கினால், **நடிகன் சொற்களிலே இல்லாத, நடிப்பிலே மட்டும் 'காண'க்கூடிய 'காட்சி'ப் பண்புகள் கூட அடிக்கு அடி சொல்லுக்குச் சொல் மிளிர்வது காணலாம்.** இக்காட்சிப் பண்புகள் நாடகத்துக்குரியவை. சிலப்பதிகாரம் நடிப்பதற்கும் கேட்பதற்கும் உரியதேயன்றி, வாசிப்பதற்கு உரியதல்ல என்பதும் இங்கே நினைவூட்டத்தக்கது.

தமிழகப் புதிர்களில் ஒன்று

பரத நாட்டியம் பயில்பவர் இந்த அடிகளை நடித்துக் காட்ட முன் வராதது தமிழகப் புதிர்களுள் ஒன்றே என்று கூறவேண்டும். பரத நாட்டியம் தமிழர் கையிலிருந்தாலும் அதன் தலைமையும் உரிமையும் அதனை இயக்கும் ஆற்றலும் இன்னும் தமிழர் கைக்கு வரவில்லை என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது.

இத்தகைய அடிகளைப் பரதநாட்டியமாக்கிக் காட்டினால் அவை அடிக்கு அடி, சொல்லுக்குச் சொல் பரதநாட்டிய முத்திரைகளுக்கு இசைய அமைந்தவை என்பது விளங்கும். அவை கண்ணகியின் உருவையும், அதைக் கண்ட கோவலன் உள்ளக் கிளர்ச்சியையும் சொல், சொல்குறிப்பு ஓசை சந்தம் ஆகிய எல்லாத் திணங்களிலும் வாசிப்போர், கேட்போர் கண்களின் முன்னும் கருத்தின் முன்னும் கொண்டு வருபவை ஆகும். அவற்றின் ஓசை கண்ணகியின் அங்க அசைவையும் கோவலன் உள்ளத்தின் அசைவுகளையும் கூட நம் காதுகளில் அது பாயச் செய்கின்றன.

இயல், இசை, நாடகம் ஆகிய மூவகை மொழி சார்ந்த கலைப் பண்புகளும் இந்த அடிகளில் கலந்து மடிகின்றன. இந்த அடிகளில் மட்டுமல்ல; மங்கலவாழ்த்து முதல் வரந்தரு காதை வரை காதை தோறும், அடிதோறும் இம்முத்திறப் பண்புகளைக் காணலாம்.

இவ்வகையில் முத்திறப் பண்புகளும் வாய்ந்த அடிகளைத் தமிழில் வேறு எந்த நூலிலோ--உலகில் வேறு எந்த மொழியிலோ கூட எளிதில் காணமுடியாது.

இந்த மூவகைப் பண்புகளும் தான் சிலப்பதிகாரத்துக்கு வாசகர் உள்ளத்தில் இன்னதென்று தெளிவாக விளக்கப்படமுடியாத---வேறு எந்த நூலாலும் விளையாத மாய உணர்ச்சியை, கிளர்ச்சியை, உணர்வு அலை இயக்கத்தை உண்டு பண்ணுகின்றன.

இடைக்காலமும் இக்காலமும்

இத்தகைய நூலைத்தான் தமிழர்-இடைக்காலத் தமிழர்-தேவார காலமுதல் திருவருட்பாக் காலம் வரை வாழ்ந்த தமிழர் மறந்திருந்தனர். இத்தகைய நூலைத்தான் கம்பர் காலத் தமிழன் காணவில்லை, பெரியபுராண காலத் தமிழன் பேணவில்லை--கவிராயர் காலங்கள் கருத முடியவில்லை! அக் காலத் தமிழர் தமிழ்ச்சுவை இருந்தவாறு என்னே!

நூல் வெளிவந்த பின்னும் ஒரு தலைமுறைவரை இந்தத் தமிழ் வகையில் தமிழர் பெரும்பாலும் காணாக் கண்ணினர், கேளாக் காதினராகவே இருந்தனர்.

ஆனால் இன்று நாம் காண்கிறோம், கேட்கிறோம், கண்டு வருகிறோம், கேட்டு வருகிறோம், ஏனெனில் நாம் மறுமலர்ச்சிக் காலத்தில் இருக்கிறோம். **மறுமலர்ச்சியின் முதல் அலைமுகட்டில் நாம் மிதக்கிறோம். அந்த மறுமலர்ச்சியை ஊக்கியது, ஊக்கி வளர்த்தது, வளர்த்து வருவது சிலப்பதிகாரமே — அதற்கு இன்னும் உயிர்கொடுத்து வளந் தருவது அந்நூலே.** அந்நூல் தந்த உணர்வே அந்நூலைக் காண, கண்டு நுகர நமக்கு வழி வகுக்கின்றது. அந்நூலை உணர உணர தமிழர் நுகர்வுத் திறமும் அறிவுத் திறமும் இன்னும் விரிவு பெறும். அப்போது தான் மறுமலர்ச்சி புதுமலர்ச்சியுற்று புதுப் பொருள் புதுப் பண்புகளை நமக்கு எடுத்துக் காட்டும்.

மறுமலர்ச்சியும் சிலப்பதிகாரமும்

மறுமலர்ச்சிக்குரிய தலை சிறந்த நூல் என்று சிலப்பதிகாரத்தைக் குறிக்கும்போது, சிலரல்ல, பலர் முகங்களில் வினா-வியப்புக் குறிகள் எழும்! திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவற்றைத் தாண்டியா சிலம்பு மறுமலர்ச்சிக்கு உயிர் நிலையானது என்று எதிர்குரல் எழுப்பத் தோன்றும்! ஆனால் அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உண்டு. திருக்குறளும் தொல்காப்பியமும் என்றும் நிலவியவை--ஏட்டிலும் அச்சிலும் ஒருங்கே பயின்றவை. மறுமலர்ச்சி அவற்றிற்கு ஒளி தந்தது--அவற்றால் புத்தொளி பெருகின்றன. ஆனால் மறுமலர்ச்சியை அவை தூண்டி இருக்க முடியாது. நேர்மாறாக, முன் பெருவழக்காய் இல்லாது 19ம் நூற்றாண்டுக்குப் பின் வெளிவந்த சங்க இலக்கியமும், முன் அருவழக்காகக் கூட இல்லாமல் புதையுண்டு கிடந்து அதே காலத்தில் வெளிவந்த சிலப்பதிகாரமும் மறுமலர்ச்சியைத் தூண்டிய பின்னரே, திருக்குறளும் தொல்காப்பியமும் புதுப்பொருள் தந்து புத்தொளி பிறக்கலாயின. ஆகவே இவ்விரு சார்பு நூல்களும் மட்டுமே மறுமலர்ச்சியைத் தூண்டியவை ஆகும்.

இவற்றுள்ளும், சங்க இலக்கியம் புத்தறிவு தந்தது--புலவர்களிடையே! புத்தவா ஊட்டிற்று--தமிழ் ஆர்வலரிடையே! ஆனால் புலவரிடையே தவழ்ந்து, மாணவரிடம் கொஞ்சி, மக்களிடம் அது நடமாடவில்லை. அந்நிலை ஏற்படும் நாள் இனி வரலாம். சிலப்பதிகாரம் அதற்கு வழி செய்யலாம். ஆனால் இன்றே சிலப்

(9-ம் பக்கம் பார்க்க)

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்



பேராசிரியர் சுந்தரனார் விழாவில் அப்பாதுரையார்.
சென்னை—23-4-55.

★ கம்பன் புளுகு-வால்மீகி வாய்மை ★

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் எந்த ஒரு புதிய ஆராய்ச்சி செய்வதற்கும், அறிவு மட்டும் போதாது; அசாத்திய துணிச்சல் ஒன்று வேண்டும். சொல்ல வருகிற கருத்து நல்ல கருத்தாக இருந்தாலும், பல்லாண்டுக் காலமாக ஊறிக்கிடந்த பழைமைக் கருத்திலிருந்து அது மாறுபட்டால், அபபாவிகளேயே அதிகமாகப் பெற்ற தமிழர் சமுதாயம் தடியெடுத்துத் தாக்கவரும் அதைத் தாங்கிக்கொண்டு, ஆராய்ச்சிகளை வெளியிட்டுவிட்டரல் ஏதேனும் ஒரு தலைமுறை கண்டிப்பாக அதைப் பாராட்டியே தீரும். இவ்வண்ணமே நடந்துவந்திருக்கிறது என்பதற்கு சுயமரியாதை இயக்க வரலாறே ஒரு சான்றாகும்.

உண்மையைச் சொன்னால், தமிழ் நாட்டில் அறிவு மிக்க ஆராய்ச்சியாளர் பலருக்கு துணிவும் இருக்கவில்லை. அதனாலேயேபண்டைய நூல் முறைகளை ஒட்டியும், முன்னோர் வகுத்த,சரியான-தவறான,இலக்கிய இலக்கணங்களை ஒட்டியும் தங்களால் எவ்வளவு செய்யமுடியுமோ அதை மட்டும் செய்துவிட்டு, பல்லோரின் நம்பிக்கைக்கு எதிரான புதிய கருத்தைக் கண்டாலும் சொல்லாமலே போயும்விட்டனர்.

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த அறிஞர்களும் ஒரு சில புலவர்களும் மட்டுமே தோன்றிய தோன்றியாங்கு வெளியிட்டனர். அந்த ஒரு சில புலவர்களிலே கொள்கிருர். கம்பன், தன் கூற்றிலே "வேதியர் உரையின்படி தாம் ராமகாதையை யாத்ததாகக்" கூறுகிறுன். அதை எடுத்துக் காட்டிய பா. வே. மா, "கம்பன் தனக்கே ஆரிய மொழிப் பயிற்சி இல்லாமலோ, அன்றி இருந்திருப்பினும் வேதியர் சொல்லை வேதச் சொல்லாக தன் தலையில் தாங்கி, தனது நூலை ஆக்க எண்ணிய நோக்கத்தாலோ, மற்றும் அவ் வேதியருடன் ஆராய்ந்தே தனது இராமாயணத்தை யாத்தனன் என்றிருத்தலாலும், தான் தமிழ்ப் பாவினுல் மொழிபெயர்த்ததென்று கம்பன் கூற்றுகவே இருத்தலாலும், கம்பன் நூலிடையே அறியக் கிடக்கும் மக்கள் ஒழுகலாறு, வட நாட்டு ஆரிய மக்கள் ஒழுகலாற்றிற்குப் பல வகைகளில் மாறுபட்டதாகப் புலப்பட்டமையினுலும், நீலகிரி மலைமேல் ஆனந்தாஸ்ரமத்து அமர்ந்திருந்த மகரிஷி சிவத்யானந்தர் வால்மீகத்திலிருந்து கம்பன் பிறழ்ந்ததை வற்புறுத்தி 1-3-1919ல் ஒரு திருமுகம் எனக்குக் கடைக்கணித்த படியாலும் கம்பனுக்கு முதனூலாகிய வான்மீகத்துடன் ஒத்திட்டுப் பார்க்கும்அக்கறையும் ஊக்கமும் அடியேனுக்குத் தோன்றின" எனவும் கூறுகிருர்.

நூலிலே ஆசிரியர் கம்பனைப் 'புளுகுச் சக்கரவர்த்தி' என்றழைப்பது இலக்கிய ஆதாரத்தோடு ரசிக்க வேண்டிய நகைச்சுவையாகும். அருமையாக இருக்கிறது. கம்பன் கேட்டு எழுதியவன். வால்மீகியோ ராமன்கூடவே யிருந்து சீதைக்குப் பிள்ளைப்பேறுபார்த்தவன். அதோடு நான் முகனையும நாரத மகாமுனியையும் உதவிக்கு நியமித்துக் கொண்டு, ராமனும் சீதையும் இருந்த இருப்புக்களை-அழுத அழுகைகளை-சிரித்த சிரிப்புக்களை ஒன்று விடாமல் ஒலிப்பதிவு செய்தவன் எனக் கூறப்படுகிறது. ஆகவே, சமகாலத்தவன் செய்தியே சரியான செய்தி என்று நகைச்சுவையுடன் அதையும் கூறிவிடுகிருர்.

பின்னுலே வால்மீகி ராமனைக் காட்டும்தோறும் 'அசல் இராமனின் அவலட்சணம் பாரீர் !' என முழக்க இது உதவுகிறது. முந்தா நாளைய மனிதன், "எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின்மேல்"-அதாவது இங்கிலீஷ் 885-ல் வாழ்ந்தவன் கம்பன், அவன் வால்மீகி இராமாயணத்தைக் கூட்டியும்,குறைத்தும், திரித்தும் எழுதியதை "புளுகினேன்" என்று வெளிப்படையாகச் சொல்லித் தொலைக்கவுமில்லை. 'அப்படியே' எழுதியதாகக் கூறி புளுகின்மேல் புளுகு போடுகிறுன். பொதுக்கதையின் குறிப்பிட்ட ஒரு பகுதியைத் தவிர, மற்றப் பகுதியும், பாத்திரங்களின் குணதிசயங்களும் கம்பனுல் முழுக்க முழுக்க மாற்றப்பட்டிருக்கின்றன. அதோடு கம்பமண்டோதரி-கம்பனின் மண்டையோட்டிற் முழுமை பெற்ற சைவனுக காட்ட வந்து, தன்னையுமறியாமல் கோட்டை விடுகிறுன்.

ஆனுல், அதே கங்கைப்படலத்தில் (42-43) முனிவர்கள் சூழ இருந்த கம்ப இராமனை- குகன், மீன் காணிக்கையோடு வந்து சந்திக்கிறுன். 'இராமன் அதை வாயால் உண்ணுமல் மனத்தினுலேயே உண்டான்' என்கிறுன் கம்பன். இதிலும் இராமனைப் புனிதமாக்க, கழுவித் துடைக்க முடியாமல் கம்பன் திண்டாடுகிறுன்.

"முனிவர்கள் மத்தியில் மாமிசம் தின்னக் கூச்சப்பட்டான். அவர்கள் இல்லையெனில் சாப்பிட்டிருப்பான்" என்கிருர் ஆசிரியர்.

குகப் படலத்தில் (40) இராமனுக்குப் பதிலாக, பரதன் கூற்றுக கம்பன் கொட்டியளக்கும் குறுணி இது.

"இயன்றதென் பொருட்டி னுலிவ்
விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயும்
அமிர்தென வரிய புல்லில்
துயின்றனை யெனவும் ஆவி
துறந்திலென் சுட்ருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடும்
செல்வமுங் கொள்வன்யானே"

இதிலும் கம்ப இராமன் கிழங்கும் காயும் உண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அதுவும் பரதன் கூற்றுக! பரதனுக்காவது நேரடியாகத் தெரியுமா? இல்லை! அதுவும் 'கேள்வி

'மகா மகோ' உபாத்தியாயர்களும் மறுக்கமுடியாத நூல்!

பா. வே. மாணிக்க நாயக்கரும் ஒருவர் என்பது, அவர் வரைந்த **'கம்பன் புளுகும் வால்மீகியின் வாய்மையும்'** என்ற நூலான் அறியக்கிடக்கின்றது.

பொறியியல் புலமையில் தேர்ச்சி பெற்றிருந்த அன்னுர் இலக்கியத் துறையிலும் அளவுகடந்த ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை இந்த நூல் நமக்குச் சொல்கிறது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாகல்பட்டி என்ற சிற்றூரில் பிறந்த அன்னுர், பிறந்தநாள் அறியப்படவில்லை. இந்த நூல் அன்னுரின் பெருமையைப்பாடுகிறது; நூற்றுக்கு நூறு இலக்கியத் திறனுய்வாகவே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. நூலின் ஆரம்பத்திலேயே தன் 'துணிவை முன்னீடாக யிட்டு' இப்பொருளைப் பேச வந்திருப்பதாக பா. வே. மா. கூறுகிருர்.

தன் ஆராய்ச்சிக்குஅவர் காரணம் கூறும்போது; "நாரணன் வினையாட்டை நாரதமுனிவன் கூற, வால்மீகி வடமொழியில் எழுதினுன் என்வும், பின்னர் கம்பன் தமிழில் வரைந்தான் எனவும்" பிறர் சொல்லியிருப்பதைப் படித்துப் பார்த்ததால் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுப் பார்க்க மனம் துணிந்து இறங்கியதாகவும் கூறுகிருர். ஆரம்பத்தில் கம்பன் கூற்றுக உள்ள **'தேவபாடையின்'** என்ற பாட்டைக் குறிப்பிட்டு, வால்மீகியிலிருந்தே தான் தமிழில் பாடியதாக கம்பரே சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டுகிருர்.

இந்த இடத்தில் தன் திறனுய்வுக்கு எவரும் மறுத்துரைக்க முடியாத அடிப்படையைத் தேடிக் வால்மீகி ராமாயணம், கம்பராமாயணம் என பதிப்பிக்கப்பட்ட அச்சுப் பிரதிகளே தனக்கு உதவியதாகக் கூறி, கம்பனின் கையெழுத்துப் பிரதியிலிருந்து இது மாறுபட்டிருந்தால்-கம்பன் ஒழுங்காகவே எழுதி, பதிப்பித்தோர் அதைமாற்றி வெளியிட்டிருந்தால்-புளுகு கம்பன்மேல் போகாமல், பதிப்பித்தோர்மேல் போகட்டும் என்றும் கூறிவிடுகிருர்.

"அல்லது தமிழனுகிய கம்பன் 'ஆரியம் என்ருல் கேழ்வரகு' என்கிற வரையில் மாத்திரம் தெரிந்திருந்தானுனுல் அவனுக்கு வால்மீகி நூலை எடுத்தோதிய வேதியர்கள் புளுகியிருத்தல் வேண்டும். ஆனுல், அக்காலத்து வேதியர்கள் புளுகர்கள் அல்லர் என்று யான் முழுதும் நம்பியிருத்தலினுலே புளுகென்று தோன்றிய முழுமையினையும் நம்மவன் கம்பன் புளுகென்றே யான் தீர்மானித்தேன். அவ்வளவு திறமையுடன் புளுகும் வன்மையும் புளுகுச் சக்கரவர்த்தியாகியகம்பனையன்றிவேறு யாருக்கும்கிட்டக்கூடியதென்றும் நம்பவில்லை" எனவும் அழுத்தமாகக் கூறுகிருர்.

கண்ணதாசன்

இவற்றிலிருந்து ஆசிரியரின் ஆராய்ச்சி பலமான அஸ்திவாரத்தோடு ஆரம்பமாவதைக் காண்கிறோம். தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி செய்யப்பட்ட திறனுய்வே என்றும் முடிவுகட்டிக்கொள்கிறோம். வால்மீகி எழுதியதுதான் அசல் கதை என அவர் கூறும் முடிவுக்கு காட்டும் காரணம் குள்ளிருந்த பிறந்தவள் எனவும் அழகாக எடுத்துச் சொல்கிருர்.

பலவகை மாமிசங்களையும் சுவைத்துத் தின்கிறுன் வால்மீகி இராமன். சைவனுக வேஷம் போடுகிறுன் கம்ப இராமன். நகரை நீங்கி கங்கையாற்றங்கரைக்கு வந்த கம்ப ராமனுக்கு அங்கே வாழ்ந்த முனிவர்கள்,

"காயும் கானிற்
கிழங்கும் கனிகளும்
தூயதேடிக் கொணர்ந்தனர்
தோன்றனி
ஆயகங்கை அரும்புனலாடினை
தீயை ஓம்பினை
செய்யமு தென்றனர்" (15)

அதாவது முனிவர்கள் மரக்கறி உணவு கொண்டு வந்து கொடுத்தனர் என்பதை இது சொல்லுகிறது. முனிவர்கள் பாவம்! மரக்கறி உணவே சாப்பிட்டுப் பழக்கமானவர்கள். அதனுல் தங்கள் உணவையே இராமனுக்கும் கொடுத்தனர். இதனுல் மட்டும் இராமனுடைய உணவு மரக்கறிதான் என்பதை உணரமுடியாது. முனிவர்கள் மாமிசம் சாப்பிடுகிறவர்களாக இருந்து, அதைக் கொண்டு வந்து இராமனிடம் கொடுத்திருந்தால், சாப்பிடாமல் இருந்திருப்பானு என்பதைக் கம்பன் சொல்லவில்லை.

அதாவது வால்மீகி இராமனை, முழுக்க முழுக்கக் கழுவமுடியாமல் கம்பன் திண்டாடுகிறுன். இராமனை ஞானம், கேள்விச் சான்று சான்றுகாது.

ஆனுல், உண்மை என்ன? வால்மீகியின் கூற்றை ஆசிரியர் அழகாக எடுத்துக்காட்டுகிருர். அயோத்தியா காண்டம் 20-வது சருக்கத்தில் "காட்டுக்குப் போனுல் மாமிசம் சாப்பிட முடியாதே" என்று இராமன் கலங்குவதை அப்படியே தூக்கி நிறுத்துகிருர். அந்தக் காலத்து ஆரியர்கள் என்னென்ன ஊன் தின்னுர்கள் என்பதையும் ஆதாரத்தோடு கூறுகிருர்.

இதுபோல, சாதாரண இராமன் அசாதாரண இராமனுக ஆக்கப்பட்டது உட்பட அத்தனை செய்திகளையும் அழகாக எடுத்துக்காட்டுகிருர் ஆசிர்யர் பா. வே. மாணிக்க நாயக்கர். இதைப் பதிப்பித்த தோழர் தா. எ ஞானமூர்த்தி, மாணிக்க நாயக்கரைப் பற்றி நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் 'என் கதை'யில் எழுதியிருப்பதை தன்னுரையில் குறிப்பிடுகிருர். நாமக்கல்லார் அதிலே, "இராமாயணத்தை எரிப்பவர்களுக்கு மாணிக்க நாயக்கர்தான் பாடஞ் சொல்லிக் கொடுத்தாரோ என்று நான் எண்ணுவதுண்டு," எனக் குறிப்பிட்டிருப்பதாகவும், அது தவறு எனவும் பதிப்பாளர் கூறுகிருர்.

முதலில் நாமக்கல்லார் எழுத்தை அவர் பொருட்டாக எடுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. காரண[illegible] இலக்கியத் திறனுய்வு நோ[illegible] களும், முறையும், நாம[illegible] லாருக்கு நாளைவரை புரியா[illegible] அடுத்து பா. வே. மா. வின்[illegible] கம் அதுவல்ல என்பதை [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

அவர்கள் மறைந்ததும் இன்ப வல்லிக்கு அழுகையும், ஆத்திர மும் வந்தது. படுக்கையில் படுத் தாள். விம்மி விம்மி அழுதாள். ஆண்களின் நேசமும்--அதிலும் அரசர்களின் காதலும் அபாயம் என்று சிலர் சொல்லக் கேட்டிருக் கிருள். இப்போது அது நினைவுக்கு வந்தது. இளவரசரின் காதல் அவள்மீது அணுவளவும் குறைய வில்லை என்பது அவளுக்குத் தெரி யும். ஆனல் தளபதி தளநாயகன் இடையூருகக் குறுக்கே நிற்பது தான் அவளுக்குப் பிடிக்கவில்லை. இன்று தன் முன்னிலையிலேயே இளவரசரின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றதை அவள் முற் றிலும் வெறுத்தாள்.

தளநாயகனின் பேச்சைத் தட்டி நடக்கமாட்டான் இராசராசன். அவ னுடைய வற்புறுத்தலால் இள வரசர் போய்விட்டால், பிறகு இன்ப வல்லியின் கதி என்ன? உதவி தேவைப்படும் வரை தன்னைப் பயன் படுத்திக்கொண்டார்கள். தேவை முடிந்துவிட்டது. திரும்பிப் பாரா மல் ஓட்டமெடுக்கிருர்கள். இளவர சர் காட்டிய பாசமும் நேசமும் இவ்வளவுதானு? உண்மையான அன்பு செலுத்தியிருந்தால் தள நாயகனையும் மீறி வந்துவிட முடி யாதா? துயரம் நெஞ்சை அழுத்த, குப்புறப்படுத்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் இன்பவல்லி.

யாரோ நடந்து வரும் சப்தம் அவளுக்குக் கேட்டது. இன்பவல் லிக்கு அருகில் வந்து நின்று, அவள் கண்ணீரைத் துடைத்ததை அறிந்தாள். தோழிகளில் ஒருத்தி தான் என்று நினைத்து, "உன் னுடைய ஆறுதல் எனக்குத் தேவையில்லை. நீங்கள் இருவரும் எங்கேயாவது தொலைந்து விடுங் கள்!" என்று சிறிருள் இன்ப வல்லி.

"இன்பவல்லி!" என்ற இனிய ...--எப்போதும் கேட்டு மகிழ்ந்த --இனியும் அம்மாதிரி கேட்க ...கொண்ட குரல்--இராசராச குரல்கேட்டுத் திடுக்கிட்டு எழுந் இராசராசன் அங்கே நிற்ப ...டாள். அவளுக்கு அழு ...தா என்று தெரிய வில்லை. கண்கள் 'பொல பொல' வென்று நீர் சிந்த, வாய் புன் னகை செய்ய, அவனைக் கட்டிப் பிடித்து, அவன் மார்பிலே முகத் தைப் புதைத்துக் கொண்டாள். அவனும் அவளை ஆரத் தழுவிக் கொண்டான். இருவரும் எவ்வளவு நேரம் அப்படி நின்ருர்கள் என் பது அவர்களுக்கே தெரியாது.

"நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து செல்வதென்றே முடிவு செய்து விட்டீர்களா?" என்று கேட்டாள் இன்பவல்லி. "உன்னைப் பிரிந்து எப்படிச் செல்ல முடியும்? உன்னை அழைத்துச் செல்லத்தான் வந் தேன்" என்ருன் இளவரசன் புன் னகையுடன்.

"அப்படியா? சரி, வாருங்கள், புறப்படுவோம்!" என்று புறப்பட ஆயத்தமானுள் இன்பவல்லி. "அவசரப்படாதே! ஒரு பெரிய நாட் டிற்கு அரசியாகப் போகும் நீ இப் படியா புறப்படுவது? நீ நன்ருக அலங்காரம் செய்துகொண்டு தயா ராக இரு. நம்மை ஆடம்பரமாக வரவேற்று அழைத்துச் செல்ல, தேருடன் ஆட்கள் வருவார்கள்" என்ருன் இளவரசன்.

"அவ்வளவும் பொய்! கேலி செய்கிறீர்கள்!" என்ருள் இன்ப வல்லி. "உண்மையா, பொய்யா என்பதைச் சிறிது நேரத்தில் பார்!" என்ருன இளவரசன். "எப்போது புறப்பட வேண்டும்? எப்போது போய்ச் சேருவோம்?" என்று கேட்டாள் இன்பவல்லி.

"இன்னும் சிறிது நேரத்தில் புறப்படவேண்டும். பத்தே விஞடி களில் போய்ச் சேர்ந்துவிடலாம்!"

"இதிலிருந்தே நீங்கள் சொல் வது பொய் யென்று தெரிகிறது. பத்து விஞடிகளுக்குள் எப்படிப் போய்ச் சேரமுடியும். வேகமாகப் பறந்து சென்ருல் கூட முடி யாதே!"

"மெதுவாக நடந்து சென்ருலே போய்விட முடியும்!"

"எங்கே?"

"இடைதுறை அரண்மனைக்கு!"

"அப்படியானுல்சோழநாட்டிற்கு என்னை அழைத்துச்செல்லப் போவ தில்லையா?"

"நானே போகவில்லை. உன்னை எப்படி அழைத்துச் செல்வது?"

"ஏன்?"

"இடைதுறை நாட்டை இப்போது தானே கைப்பற்றினேம். இங்கே நம் நாட்டின் பிரதிநிதியாக நானே இருக்கப்போகிறேன்!"

இதைக் கேட்டதும் இன்பவல் லிக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட் டது. அதே சமயம் சில வீரர்கள் அங்கே வந்தனர். அவர்களைக் கண்டதும், "இதோ வந்துவிட்டார் கள். புறப்படு இன்பவல்லி!" என்ருன் இராசராசன். மறுவினு டியே தன்னை அலங்காரம் செய்து கொள்ளக் கிளம்பினுள் இன்ப வல்லி.

11

கதையைக் கேட்டுக் கண்ணீர் வடித்தனர்

அல்லற்பட்டு ஆற்றுது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

—குறள்.

தளநாயகனும், நந்தினி யும், சோழநாட்டுப் படைவீரர்களும், அன் னையின் படைகளும் தஞ்சையை நோக்கி அடியெடுத்து வைத்தனர். இடைதுறையானிட மிருந்து மணிமுடிக்கு ஓலை கொண்டுவந்த தூதுவர்களைக் கைது செய்து, அதற்குப் பதில் தன் னுடைய ஆட்களையே தஞ்சைக்கு அனுப்பி வைத்திருந்தானல்லவா தளநாயகன்? அந்த வீரர்களுக் குத் தளநாயகன் சில உத்தரவு களையும் பிறப்பித்திருந்தான். அதன்படி அத்தூதுவர்கள் சோழ நாட்டிலும், அதன் எல்லைகளிலும் சிதறுண்டிருந்த சோழப் படை களைத் திரட்டி, சமயம் வரும்வரை காத்திருந்தார்கள். அவர்களுடன் தளநாயகனும் தொடர்பு கொண் டிருந்தான்.

தளநாயகன் புறப்பட்ட செய்தி அத்தூதுவர்களுக்கு ஒற்றர்கள் மூலம் அறிவிக்கப்பட்டது. அதனல் ஆங்காங்கே சிதறுண்டு கிடந்த படைவீரர்கள், நாட்டை மீட்க உணர்ச்சிவசப் பட்டவர்களாய், வெற்றிமுழக்கத்துடன் வரும் தள நாயகனையும், படைகளையும் வர வேற்றனர். வாழ்த்துக் கூறினர். தளநாயகனுடன் தாங்களும் சேர்ந்து கொண்டனர்.

தஞ்சையை நெருங்க நெருங்க தளநாயகன் படையெடுத்து வரும் செய்தி நாடு முழுவதும் காட்டுத் தீயெனப் பரவியது. இடைதுறை யான் கொல்லப்பட்டதும், இடை துறை நாடு தளநாயகன் வசமான தும், இளவரசன் அதை ஆட்சி செய்து வருவதும் கதை கதையாகப் பேசப்பட்டது.

அரிசங்கமன் இச்செய்தியை அறிந்தான். மகள் மரகதத்தை யும் பிரிந்து, இடைதுறையானும் இறந்துபோனதால் செய்வதறியாது திகைத்தான். எப்படியாவது தஞ் சையிலிருந்து தப்பிவிடத் திட்டம் போட்டான். ஆனல் தளநாயகன் படையெடுத்து வரும் செய்தி தஞ் சையிலும் பரவியது. செய்தி கேட்ட மக்கள் உற்சாகப் பட்டனர். அரிசங்கமன் தப்பிச்செல்லநினைத்த இரவில்தான் தஞ்சையிலும் பெரும் புரட்சி ஏற்பட்டது.

மக்களும், சோழனை ஆதரிக்கும் படைவீரர்களும் ஒன்று சேர்ந்து கலகம் செய்தனர். இடைதுறை யானுக்கு உதவிபுரிந்தவர்களையெல் லாம் கண்ட கண்ட இடங்களில் வெட்டி வீழ்த்தினர். கலகத்தால் கலக்கம் கொண்ட இடைதுறை நாட்டுப் படைகள் நகரத்தை விட்டு வெளியேறின. கலகக்காரர்களிடம் அரிசங்கமனும் சிக்கினுன். இரா சேந்திரசோழர் முன்பு அவனை நிறுத்தி வைத்து விசாரணை

செய்யப் பலர் விரும்பினர். ஆனல் ஆத்திரம் கொண்ட மக்கள் பலர் அரிசங்கமனை அடித்தே கொன்றனர்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. தஞ்சை நகர வீதிகளில் இரத்த ஆறு ஓடிற்று. இடைதுறையானின் படைகள் இருந்த இடம் தெரியவில்லை. சிறைகள் உடைக்கப்பட்டன. அரிசங்கமன்போன்ற துரோகிகளின் மாளிகைகளுக்குத் தீவைக்கப்பட்டது. அரசகுடும்பத்தினரைக் காவல் செய்த வீரர்கள், மக்கள் திரண்டுவருவதைக் கண்டு ஓட்டமெடுத்தனர். இராசேந்திர சோழரும், பட்டத்தரசியும், அவர்களுடைய மைந்தர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

மன்னரையும் அரசகுடும்பத்தினரையும் கண்ட மக்கள் ஆரவாரம் செய்தனர். 'சோழ மன்னர் வாழ்க!'' என்று முழக்கினர். அதே சமயம் தளநாயகனும் மற்ற படைவீரர்களும், அன்னையின் படைவீரர்களும், அதைச் சேர்ந்த பெண்களும் அணிவகுத்து தஞ்சைக்குள் நுழைந்தனர். மன்னர் எல்லோரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

மன்னரும், அரசகுடும்பத்தினரும், தளநாயகனும், நந்தினியும் அரண்மனையின் ஏழாவது உப்பரிகைமீது நின்று எல்லோருக்கும் காட்சியளித்தனர். மக்களும் அவர்களைப் பார்த்து கைகொட்டி ஆரவாரித்தனர். ''மன்னர் வாழ்க!'' என்று கோஷமிட்டனர். அன்னையைப் பற்றிய செய்திகளும், நடவடிக்கைகளும் மக்களுக்கு முன்பே கிடைத்திருந்தன. ஒரு காலத்தில் எதிரிகளால் கடத்திச் செல்லப்பட்ட கயல்விழிதான் அன்னை என்பது பலருக்குத் தெரிந்திருந்தது. நந்தினி உப்பரிகையில் தளநாயகனுக்குப் பக்கத்தில் நிற்பதைப் பார்த்தனர். ''தளபதி வாழ்க!'' என்று கோஷமிட்டார்கள், ''நந்தினி வாழ்க! அன்னை வாழ்க!'' என்றும் கோஷம் எழுப்பினர். சிறிது நேரத்திற்குப் பிறகு மன்னரும், மற்றவர்களும் உள்ளே செல்ல, கூட்டத்தினரும் கலைந்து சென்றனர்.

''தளநாயகா! முன்பே உன் வார்த்தையைத் தட்டி நடந்தேன். இடைதுறையான் கபடநாடகமாடிவிட்டான். நீயும், இராசராசனும் புயலிலகப்பட்டு மடிந்ததாகச் செய்தி கூறப்பட்டது. அப்போதுதான் நான் அதிக துயரம் அடைந்தேன். ஆனல் நீங்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்தது எனக்குத் தெரியாது. இடைதுறையானைக் கொன்று, இராசராசனை நமது பிரதிநிதியாக நியமித்ததுதான் சரியான செய்கை. உனது துணிச்சலுக்கும் வீரத்திற்கும் சோழநாடு என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறது. ஆனல் நான் செய்து முடிக்கவேண்டிய ஒரு காரியத்தை, நீயாகச் செய்து முடித்தது தான் எனக்குத் திருப்தியளிக்கவில்லை,'' என்றான் மன்னன் இராசேந்திரன்.

மன்னரிடமிருந்து பாராட்டுக் கிடைக்குமென்று தான் எதிர் பார்த்தான் தளநாயகன். ஆனல் மன்னன் தெரிவித்த குறை அவனுக்கு வியப்பையளித்தது. மன்னனுக்குத் தெரியாமல், தான் செய்த குற்றம் என்னவென்று யோசித்துப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மன்னரிடமே அதைக் கேட்டுவிட்டான்.

இராசேந்திரன் சிரித்தான். ஆனல் என்னவென்று சொல்லவில்லை. மன்னனின் கண்கள் தளநாயகனுக்குப் பக்கத்தில் நிற்கும் நந்தினியைப் பார்த்தன. நந்தினி வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள். இப்போது புரிந்துகொண்டான் தளநாயகன். அவனும் சிரித்துக் கொண்டே, "ஓகோ! நந்தினியைப் பற்றிக் கேட்கிறீர்களா?'' என்றான்.

''ஆமாம். நான்தான் அவளை உனக்கு மணம் செய்து வைக்க ஆசைப்பட்டேன். ஆனல் நீயே அவளை அழைத்து வந்து பக்கத்திலும் வைத்துக்கொண்டாய்'' என்றான் இராசேந்திரன்.

''அவளுடைய உதவியால் தான் நாடு பிழைத்தது'' என்று கூறி, அன்னையைச் சந்தித்தது முதல், எல்லாத் தகவலையும் சொன்னன். மேலும், ''சோழநாட்டை விடுதலை செய்வதையே எங்கள் கடமையாக நானும் நந்தினியும் ஏற்றோம். நாடு விடுதலையாகும் வரை திருமணத்தைப் பற்றி எதுவும் பேசுவதில்லை என்று வீரசபதம் கொண்டோம். அன்னையும் எங்களுக்கு அப்படித்தான் உத்தரவிட்டாள். கடமைக்காகவே இருவரும் சேர்ந்து வந்தோம்--காதலுக்காக அல்ல!'' என்றான் தளநாயகன்.

முன்பொரு முறை இடைதுறை நாட்டின் மீது படையெடுத்துச் சென்றபொழுது தளநாயகனும், மன்னனும் ஆலங்காட்டில் சில வீரர்களிடமும், பெண்களிடமும் அகப்பட்டுக்கொண்டதை நினைவு படுத்தினன். அந்தக் கூட்டம் சோழநாட்டின் நன்மைக்காக அங்கே வேலை செய்து வந்ததை எடுத்துச் சொன்னன்.

இடைதுறை நாட்டின் வெற்றிக்குப் பிறகு, இளமரக்காவில் விருந்து சாப்பிட்டதையும், அங்கே வந்த ஒரு நாட்டியக்காரியை இடைதுறையானின் வேவுக்காரி என்று தாங்கள் சந்தேகித்ததையும் நினைவு படுத்தினன். அவள் அவனுடைய வேவுக்காரியல்ல வென்றும், சோழநாட்டின் நன்மைக்காக இடைதுறை நாட்டில் வேவு பார்க்க, அன்னையால் அனுப்பப்பட்ட **கமலினி** என்றும், அவள் இடைதுறையானல் கற்பழிக்கப்பட்டதால் தற்கொலை செய்துகொண்டாளென்றும் கூறினன். இதேபோல் எண்ணற்ற பெண்களைச் சோழநாட்டின் விடுதலைக்காக அன்னை பலிகொடுத்திருக்கிறாள் என்பதையும் தெரிவித்தான்.

இராசேந்திரன் இதையெல்லாம் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான். வடக்கிலும் தெற்கிலும் பல நாடுகளை வென்று, ஆட்சி செய்யும் சோழ சாம்ராஜ்யத்தின் மன்னனுக்கும், அவனுடைய ஆட்சிக் குழுவினருக்கும், அவனுடைய திறமை மிக்க ஒற்றர் படையினருக்கும் தெரியாமல், மறைமுகமாக இடைதுறையான் சதி செய்ததும், அவனுக்கும் தெரியாமல் அவனுடைய சதியை நசுக்க அன்னை எடுத்துக்கொண்ட முயற்சியையும், அதற்காக அவள் தேர்ந்தெடுத்த ஆயிரந்தீவையும், அவள் பெற்ற வெற்றியையும் எண்ணி, எண்ணி வியந்தான். பாராட்டிப் பேசினன்.

''மன்னரே! அன்னையின் சபதம் நிறைவேறிவிட்டது. அவளுடைய படைதான் நமக்கு இன்றுவரை உதவி புரிந்தது. ஆனல், அன்னையின் வரலாறு மிகவும் மர்மமானது. இதுவரை யாருக்கும் தெரியாத புதிர். அதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அன்னையை அரசாங்க மரியாதையுடன் வரவேற்பு செய்ய வேண்டும். ஏற்கனவே அன்னைக்குச் செய்தி அனுப்பியிருக்கிறேன். ஆனல் நமது அழைப்பின்றி அன்னை வரமாட்டாள். அதனல் ஒரு சிறு குழுவை அனுப்பி, அன்னையை அழைத்து வரச் செய்ய வேண்டும்,'' என்றான் தளநாயகன்.

இராசேந்திரனும் அதை ஆமோதித்தான். அறிஞர் குழுவொன்றையும் அன்னையிடம் அனுப்பி வைத்தான். இடைதுறை நாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தி விட்டு, இராசராசனைப் புறப்பட்டு வரும்படியும் உத்தரவு அனுப்பினன் மன்னன்.

அன்னையை அழைத்துவரச் சென்ற மன்னனின் தூதுக்குழு சாந்திமத்தீவை அடைந்தது. மங்கை முன்பே வெற்றிச் செய்தி கொண்டு சென்றிருந்ததால், சாந்திமத் தீவு அலங்காரத்துடன் காணப்பட்டது. எங்கும், ''சோழ மன்னர் வாழ்க! அன்னை வாழ்க!'' என்றே எழுதப்பட்டிருந்தன. தஞ்சையில் கண்ட வெற்றிக் குதூகலிப்பும் உற்சாகமும் சாந்திமத்தீவிலும் காணப்பட்டது. தூதுக்குழு மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் வரவேற்கப்பட்டது.

இராசேந்திரனின் உத்தரவை ஏற்று, அன்னை சோழநாட்டிற்குப் புறப்பட ஆயத்தமானள். ஆயிரம் தீவுகளும் சோழநாட்டைச் சார்ந்தவையே என்று அறிவித்தாள். மங்கை, மரகதம், இன்னும் பல பெண்களையும் உடனழைத்துக் கொண்டு புறப்பட்டாள். ஆனல் அன்னை தனிப் பல்லக்கில் ஏறி துறைமுகத்தை அடைந்தாள். மூடப்பட்ட படகொன்றில் அவள் மட்டும் தனியாக அமர்ந்திருந்தாள். படகை விட்டிறங்கியதும் மீண்டும் மூடுபல்லக்கிலேயே பிரயாணமானள்.

அன்னை புறப்பட்டு வரும் செய்தி முன்னதாகத் தஞ்சைக்கு அறிவிக்கப்பட்டது. வழிநெடுக அன்னை வரும்போது ஆங்காங்கே மக்கள் வரவேற்பளித்தனர். படைகள் தங்கிச் செல்ல வசதி செய்து கொடுத்தனர்.

அன்னையின் வருகையை அறிந்த இராசேந்திரன், தளநாயகனுடனும், நந்தினியுடனும் சென்று அன்னையையும் மற்றவர்களையும் எதிர்கொண்டழைத்தான். இராசேந்திரனைக் கண்டதும் அன்னை பல்லக்கை விட்டிறங்கினள். நடந்து வந்தாள். மன்னனின் பாதங்களில் விழுந்து வணங்கினள். ஒரு சாதாரண--எளிமையான தோற்றமளிக்கும் இந்தப் பெண்தானா இவ்வளவு சாகசங்களைச் செய்தாள் என்று வியந்தான் மன்னன். அன்னையை அரண்மனைக்கு வரும்படி அழைத்தான்.

"மன்னரே! மன்னியுங்கள். தங்கள் அழைப்பை நிராகரிப்பதற்கு வருந்துகிறேன். நான் பக்கத்திலுள்ள சத்திரத்தில் தங்கவே விரும்புகிறேன். நான் வேண்டுவது அரசரின் விருந்தோ, ஆடம்பர வாழ்க்கையோ, அரண்மனை வாழ்வோ அல்ல. என் மனதில் சதா குடைந்துகொண்டிருக்கும் பழைய சம்பவங்கள் அனைத்தையும் உங்களிடம் சொல்லவே இங்கு வந்தேன். அதைத் தாங்கள் விரும்பினல் சொல்லுகிறேன்'' என்றாள் அன்னை.

மன்னன் ஒப்புக்கொண்டான். எல்லோரும் நகருக்கு வெளியே உள்ள இளமரக்காவிற்குச் சென்று அமர்ந்தனர். களைப்புத் தீர சிறிது ஓய்வு பெற்றனர். மன்னிரின் கட்டளைப்படி, அங்கே எல்லோருக்கும் விருந்து நடைபெற்றது. பிறகு எல்லோரும் அன்னையின் கதையைக் கேட்க ஆவலாகக் கூடினர். அன்னை சொல்ல ஆரம்பித்தாள்.

''எனது முன்னோர்கள் சோழநாட்டின் பழைய தலைநகரமான உறையூரில் வசித்துவந்தார்கள். நமது மன்னரின் தந்தையாகிய தஞ்சைப் பெருஞ்சோழர் பட்டத்திற்கு வந்ததும் உறையூரிலிருந்து தஞ்சைக்குத் தலைநகரத்தை மாற்றிக் கொண்டார். அச்சமயம் உறையூரிலிருந்த நடனமாதர்கள் பலருடன் என் தாயும் தஞ்சைக்கு வந்து சேர்ந்தாள். அப்போது எனக்கு வயது பதினைந்கு இருக்கும். என்னுடைய அழகைக் கண்டு பலர் மயங்கினர். பலர் என்னை மணந்துகொள்ள முன்வந்தனர். பலர் சிறிதுநேர இன்பம் பெற, என் காலடியில் பொன்னும் மணியுமாகக் குவிக்கத் தயாராயினர். என் தாய்க்கும் உள்ளத்தில் சிறிதளவு ஆசை ஏற்பட்டதுண்டு. ஆனல் நான் உடன்பட மறுத்துவிட்டேன். முறையாக ஒருவரை மணந்து வாழவே ஆசைப்பட்டேன்.

''எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில், அரண்மனையில் அலுவல் பார்த்த கணக்காயர் வசித்து வந்தார். இளமையும், எழிலுமிக்க அவர் என் மனதை வசீகரித்தார். பலமுறை அரண்மனையில் நான் நடனமாடும் போது என்னிடம் அவரும் உள்ளத்தைப் பறிகொடுத்ததாக பின்னல் என்னிடம் சொல்லியிருக்கிறார். இந்நிலையில் இருவரும் ஒருவரையொருவர் காதலித்தோம். இருவரும் மனம் துணிந்து எங்கள் கருத்தை என் தாயிடம் தெரிவித்தோம். அப்போது என் தாய் அதற்கு இணங்க மறுத்தாள். நாங்களிருவரும் சந்திக்க முடியாமல் தடை செய்து வந்தாள்.

''இந்நிலையில் தான் சோழநாட்டை நசுக்க நாலாபக்கங்களிலிருந்தும் எதிரிகள் கிளம்பினர். பாண்டியன், சேரன், இலங்கைமன்னன், கொங்குநாட்டு மன்னன், குடகு நாட்டு மன்னன், கங்கவாடி, நுளம்பவாடி, தடிகைவாடி, சீட்புளி, பாகநாடு, சளுக்க நாடு இடைதுறை நாடு முதலிய நாட்டின் மன்னர்கள் சீற்றம் கொண்டு, சோழநாட்டிற் கெதிராகப் ... திரட்டினர்.

''மன்னர் அ னைவ ... வென்று தன் ஆட்சின ... நிறுத்த முயன்றார். ... பலமான ஒரு வே ... அமைத்தார். அந்த ...

(அடுத்த பக் ...

(முன் பக்கத் தொடர்ச்சி)

யில் இளைஞர்கள், முதியோர்கள், பெண்கள் போன்ற பலரும் சேர்க்கப் பட்டனர். அந்தப் படை பல பகுதி களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியினருக்கும் ஒவ்வொரு வித மான கட்டளைகள் பிறப்பிக்கப்பட் டன.

''எல்லாப் பகுதிப் படைகளும் எல்லா எதிரி நாடுகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டனர். ஒரு பிரிவு அங்குள்ள நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் சேகரித்து உடனுக் குடன் தஞ்சைக்கு அனுப்பி வைக் கும். ஒரு பிரிவு எதிரிகளுடன் இரண்டறக் கலந்து அவர்களுடைய திட்டங்கள் நடைமுறைக்கு வர வொட்டாது தடை செய்யும். ஒரு பிரிவு ஆங்குள்ள முக்கியமானவர் களை தன் வயப்படுத்தி ரகசியங்களைச் சேகரிக்கும். இம்மாதிரி பிரிவுகளில் இளம்பெண்கள் அதிகம் சேர்க்கப் பட்டனர்.

''இதனால் மன்னருக்குப் பல வசதிகள் ஏற்பட்டன. எந்த எதிரி முதலில் தாக்குவான் - யாருக்கு எவ்வளவு பலம்-அவனுடைய திட்ட மென்ன-என்பதெல்லாம் அறிந்து, அதற்கேற்ற முறையில் மன்னரும் எதிரிகளை முறியடிக்கத் திட்டம் தீட்டினார். ஒரே சமயத்தில் இரு எதிரிகள் படையெடுத்தால், ஒரு எதிரிக்கு தவறான தகவல் கொடுத்து, அப்படையெடுப்பைத் தாமதிக்கச் செய்யவும் ஒரு பகுதி வேவுப்படை வேலை செய்தது.

''இம்மாதிரி, பெரும் பொறுப்பு களை ஏற்ற வேவுப் படைகளுக்கு இளைஞர்களும்-பெண்களும் ஏராள மாகத் தேவைப்பட்டனர். முக்கிய மாக இளம்பெண்களே அதிகம் தேவைப்பட்டனர். இளைஞர்கள் கிடைத்தார்கள். ஆனால் இளம் பெண்கள் தேவையானவர் கிடைக்க வில்லை. அதனால் அரசர் ஒரு உத்தரவு விடுத்தார்.

''கோயில்களில் வேலை செய் வோரும், நடன மாதர்களும், விலை மகளிரும், ஒருவனை முறையாக மணந்த ஒருத்தியைத் தவிர, பரத் தையர்களாக இருப்பவர்களும் நாட்டின் நலனுக்காக வேவுப்படை யில் சேரும்படி உத்தரவில் கண் டிருந்தது. குலமகளிரும்கூட விருப் பத்துடன் இப்பணியை ஏற்க முன் வந்தால், ஏற்றுக்கொள்ளப்படுவர் என்றும் உத்தரவு கூறியது.

''இந்த உத்தரவு என்னையும் பாதித்தது. என் தாயின் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டது. ''முன்பே கணக்காயரை மணந்து கொள்ள அனுமதி கொடுக்க மறுத்தேனே'' என்று அலறித் துடித்தாள். வேவுப்படையில் சேர்ந் தால் அந்தப் பெண் ஒழுக்கமுடன் வாழ்வது கஷ்டம்; கற்பிழக்க நேரிடும் என்றெல்லாம் பலர் கூறி னார்கள். என்தாய் இதைக் கேட்டு மனமிடிந்து போனாள்''

(தொடரும்)

முக்கிய அறிவிப்பு

◎

சென்ற இதழில் வெளி யான 'மேவார் கண்ணகி' என்ற வரலாற்றுச் சித்திரம் ஆசிரியர் கண்ணதாசன் அவர்களால் 1946ல் எழுதப் பட்டதாகும்.

அடுத்த இதழில்

◎

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

'...வெட்டுக்கள்'

[சிறு கதை]

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

தனது ஆராய்ச்சிக்குப் போட்டிருக் கும் அடிப்படை கூறுகிறது. (எரிக் கும் நோக்கம் அவருக்கில்லை என்ற லும், எரிப்பவர்களோடு சேர்ந்து எண்ணெய் ஊற்றத் தயாராக இருந்ததையும் இந்த நூல் சொல் லாமல் சொல்கிறது.)

எது எப்படியோ போகட்டும். இது அருமையான ஆராய்ச்சி நூல். இதையொட்டி பா. வே. மாணிக்க நாயக்கர் இராவணாயணம் என்று ஒரு நூலை எழுதப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாராம். அந்தக் குறிப்பும் இந்த நூலில் காணப்படுகிறது. அது எழுதப் படாமலோ, அல்லது எழுதி வெளி யிடப்படாமலோ போனது உண்மை யிலே வருத்தம் தரக்கூடியதாகும்.

மொத்தத்தில் **கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்** என்ற இந்த நூல் அனைவரும் படிக்கவேண்டிய ஒன்று. கம்பன் விழாக்களிலே நடமாட வேண்டிய ஒன்று. இதைப் பகுதி பகுதியாக வெளியிட்ட 'கலைக் கதிர்' ஆசிரியருக்கும், புத்தகமாக வெளியிட்டோருக்கும் நன்றி தெரி வித்துக்கொள்ள வேண்டும். விலை **ரூ. 1-4-0. கிடைக்குமிடம்; திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, தமிழ் விரி வுரையாளர், பி. எஸ். ஜி. கல் லூரி, பீளமேடு, கோயம்புத்தூர்.**

செந்தேள்!

வைகுந்தவாசா! கோகுலத்து கோமானே! பத்தவதார பரந்தாமா! ஏழுமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! அடியேன் தெண்டம்! திடீரென முடங்கல் தீட்டிவிட்டேன் என்று தாங்கள் கோபப்படமாட்டீர்கள் என்றே கருதுகிறேன்.

உலகளந்த பெருமாளே, தங்களது திருச்சன்னதி உண்டிய லில் செந்தேள் ஒன்று தோன்றியதாக கேள்விப்பட்டேன். எனவேதான் இம்முடங்கல் தீட்ட முற்பட்டேன்.

வெள்ளியினால் தேள் செய்து போட்டால் தேள் கடிக்கா தாம். இது உண்மையானால் தேள்கடி மருந்துக்கு தடை போடும்படி, தங்களது சர்க்காருக்கு தாங்கள் ஒரு மனுப் போடலாமே!

நமது ராமராஜ்ய சர்க்கார் உடனே அனுமாராக மாறி அரை நொடியில் சட்டம் போட்டு நிறைவேற்றுவார்களே! ஒரு வேளை தங்கள் மனுவில் கண்ட கோரிக்கையை நிறைவேற்ற ஐந்தாண்டு திட்டம் போட்டு, பல ஐந்தாண்டு திட்டங்களாக ஆக்கி, ஒன்றும் செய்யாமல் இருந்துவிடுவார்களே என்று கோரிக்கை மனு அனுப்பாமல் இருந்துவிட்டீர்களோ?

சரி போகட்டும்! நீங்களாகவே தேளை வரவழைத்திருக்க லாம் என்று எனது சிறியவுள்ளம் கருதுகிறது. இதை தங்கள் திருவுள்ளம்தான் அறியுமே! அறியாத் துயிலில் தேள் எப்படி வந்தது என்பதை தாங்கள் அறியாமல் இருந்திருப்பீர்கள்! சரி எப்படியோ தேள் வந்துவிட்டது! தேள் வருகைக்கு தாங்கள் காரணம் என்று சந்தேகப்படுகிறேன். தங்கள் சன்னதி உண்டியல் பணத்தை பக்தியின்பேரால் திருடும் தீயவர்களின் திருக்கரத்தை தீண்டிட தேளை வரவழைத்தீர்களோ? தங்கள் திருக்கோயிலை விபச்சார விடுதியாக மாற்றியமைக்க, திரைமறை வில் சதிசெய்யும் கூட்டத்தை கொட்டிட தேளை வரவழைத்தீர் களோ? அசல் முதல்தர நெய்யினால் அடிசில் தயார் செய்து தங்களுக்கு படைக்காமல், டால்டா நெய்யிலும் கடலை எண்ணெய் யிலும் பலகாரங்கள் தயாரிப்பதை தடைசெய்திட தேளை வர வழைத்தீர்களா? செங்கல்லும் சாணமும் பட்டாடைக்குள் உணவுப் பொருளாக இருக்க, தட்டில் கொண்டுவரும் ஆசாமிகளை மட்டந்தட்டிட தேளை வரவழைத்தீர்களா? 'ஒய்' (Y) நாமம்-- 'யு' (U) நாமம் சண்டையை அடக்கி சமாதானம் செய்திட தேளை வரவழைத்தீர்களா? இதற்காக வரவழைத்திருந்தால் எத்தனை பேர் இதற்குள் தேளாரின் திருக்கொட்டுதலுக்கு ஆளாகியிருப் பார்கள்?

தங்களுடைய சக்கராயுதம் பழுதடைந்து பயன்படுத்த தகுதி யற்றதாகிவிட்ட காரணத்தினால் புதிய ஆயுதமாக தேளை வர வழைத்தீர்களா? தங்கள் மனையாள் இருவருடன் ஆகாயத்தில் பிரயாணம் செய்திட உதவிய அக்கால ஆகாயவிமான உயர் திரு. கருடனார் ராஜிநாமா செய்து விட்டாரா? கருடன்பதவிக்காக தேளை தேடிப்பிடிக்காமல் திடீரென தருவித்து விட்டீர்களா? ஆதிசேடன் பாம்புப் படுக்கை சரியல்ல என்று கருதி ஆதிசேட னுக்கு சீட்டுக்கொடுத்துவிட்டு தேளைத் தருவித்தீர்களா? நவரத்தின மாலைகளுக்குப் பதிலாக தேள்மாலையணிந்து கொள்ள தேளை வர வழைத்தீர்களோ? இவ்வளவு சந்தேகமும் வந்து தொலை கிறதே! நான் என்ன செய்யட்டும்?

தேள் கொட்டாமலிருக்க தேளைக் கொண்டுவந்து உண்டிய லில் யாரோ பக்தன் வந்து போட்டிருக்கிறான் என தங்களுடைய பக்தகோடிகள் கூறுகிறார்கள். திருமாலே! பாற்கடல் பரந்தாமா! தேள் கடிக்காமலிருக்க தேளையே கொண்டுவந்து காணிக்கையாக் கியது கூடவே கூடாத செய்கை! அடுக்காது? ஆம் ஐயனே! அடுக்காது? ஏன் தெரியுமா?

இன்று, தேள் கொட்டாமல் இருக்க தேளைக் கொண்டுவந்து போட்டார்கள். பாம்பு கடிக்காமலிருக்க பாம்பையே கொண்டு வந்து போடுவார்கள்! நாய் கடிக்காமலிருக்க நாயையே கொண்டு வந்து போடுவார்கள்! கழுதை உதைக்காமலிருக்க கழுதையை யே கொண்டுவந்து போடுவார்கள். இவ்விதம் ஒவ்வொன்றின் கொடுமையை தடுக்க ஒவ்வொன்றாக கொண்டுவந்து போட்டால் என்ன ஆவது? இன்று இதைப் போடுவார்கள்! நாளை? அணுக் குண்டு விழுவதை தடுக்க அதையே கொண்டுவந்து உண்டியலில் போட்டால் என்னாகும்? உண்டியலும் உடைந்து உங்கள் மண்டை யுமல்லவா உடைந்துவிடும்! எனவே எச்சரிக்கை! எம்பெரு மாளே, எச்சரிக்கை! தேளைப் போட்டதுபோல் அணுக்குண்டையும் ஹைட்ரஜன் குண்டையும் போடாமலிருக்கும்படி அறிக்கை வெளி யிடுங்கள்! இல்லையானால் தொல்லைதான்!

பத்தவதாரம் எடுத்து பாரிலுள்ளோரை பாதுகாத்தீர்க ளாமே! அதுபோல் இப்போது அவதாரம் எடுத்து அகிலத்தை காக்கவந்துள்ளீர்களோ? தேள் அவதாரம் எடுத்து வந்து அன்று உண்டியலில் காட்சியளித்தீர்களா? பிரபு, பதினோராவது அவ தாரம்--தேளவதாரம் எடுத்துள்ள எம்பெருமாளே, தேள் வரு கைக்கு விளக்கம் தருக! எனது சந்தேகங்களை தீர்த்தருள்க! தேள் வந்த காரணம் தெரியாது திகைக்கிறேன்! செந்தேள் திருமாலே! செப்புக!

—ச. செல்லப்பாண்டியன்.

மனைவியின் விலை...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பதிலாக அமர்த்திவிட்டுச் சென்றான்.

இப்போது மாயாண்டி சிறிது நெருங்கி வந்துவிட்டான். ஆனால், "துப்பாக்கி எங்கேயிருக்கிறது?" என்ற கேள்வி அவன் மனதில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

ஒருநாள் இராணுவ அணிவகுப்பு நடைபெறுவதை மாயாண்டி பார்த்தான். எல்லா வீரர்களும் ஓரிடத்திற்குச் சென்று, துப்பாக்கி ஏந்தி வெளி வந்தனர். அதைப் பார்த்ததும் மாயாண்டிக்கு அளவில்லாத மகிழ்ச்சி. துப்பாக்கிகள், மற்றும் ஆயுதங்கள் இருக்குமிடம் இப்போது அவனுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. ஆனால், இரவும் பகலும், மாறி மாறி இரண்டு சிப்பாய்கள், ஏந்திய துப்பாக்கியுடன் அங்கே நின்றுகொண்டிருக்கிறார்களே! அவர்களை ஏமாற்றி எப்படி எடுத்து வரமுடியும்?

ஒருநாள் நள்ளிரவு; கடுமையான மழை. காற்றும் பலமாக வீசிக்கொண்டிருந்தது. மழைக்காக ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தனர் காவல் காக்கும் வீரர்கள். திடீரென ஏதோ ஒரு சப்தம் உள்ளேயிருந்து கேட்டது. சிப்பாய்கள் திடுக்கிட்டனர். மீண்டும் அச்சப்தம் வருகிறதா என்று ஆவலுடன் கேட்டனர். காற்றும் மழையும் அதிகமிருந்ததால் அவர்களுக்குச் சப்தம் எதுவும் கேட்கவில்லை.

ஆனால், மாயாண்டி இச்சந்தர்ப்பத்தை நழுவ விடவில்லை. பூனை போல் பதுங்கிப் பதுங்கி நடந்தான். முள்வேலியைத் தாண்டினான். ஆயுதக்கிடங்கிற்குள் நுழைந்தான். ஆம்! அவன் எதிர்பார்த்த துப்பாக்கிகள் அங்கேதான் இருந்தன. அவன் மனம் பூரித்தது. ஒவ்வொரு துப்பாக்கியும் கல்யாணி சிரித்துக்கொண்டிருப்பதைப்போல் தோன்றின.

மாயாண்டி இரு துப்பாக்கிகளை எடுத்தான். தூக்கிக்கொண்டு நடந்தான். மிகவும் கனமாக இருந்ததால், அவனால் அவற்றைத் தூக்கிக்கொண்டு நடக்க முடியவில்லை. காலில் ஏதோ தட்டவும் துப்பாக்கிகளுடன் கீழே விழுந்தான். ஆனால், அவன் அஞ்சவில்லை; மீண்டும் எழுந்தான். துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

முள்வேலியைத் தாண்டுவதுதான் அவனுக்குச் சிரமமாக இருந்தது. அப்போது காற்றும் மழையும் அதிகமிருந்தால் சிப்பாய்கள் அந்தப் பக்கம் வரவில்லை. முள்வேலியை தாண்ட சிறிதுநேரம் பிடித்தது. பிறகு மாயாண்டி ஓட ஆரம்பித்தான்.

விரைவில் நகரின் எல்லையை அடைந்தான். அங்கு தண்ணீருள்ள ஒரு குட்டையில் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டு நகருக்குள் சென்று, ஓரிடத்தில் படுத்துக்கொண்டான்.

மறுநாள் விடிந்தது. சுடச்சுட ஒரு டீ குடித்தான். பிறகு குட்டையில் போடப்பட்ட துப்பாக்கிகளை எடுத்து தன்னுடைய மேல்துண்டில் சுற்றிக்கொண்டான். வேகமாக நடந்து தனது கிராமத்தை யடைந்தான். இனி மாயாண்டிக்குப் பயமில்லை. ஒருவரும் அவனைப் பிடிக்க முடியாது. அடேயப்பா! கல்யாணிக்காக அவன் உயிரையே ஈடுவைத்து துப்பாக்கிகள் கொண்டு வருகிறான். வேலுத்தேவன் கேட்டது ஒன்றுதான். ஆனால் மாயாண்டி கொண்டு வருவதுஇரண்டு. அதனால் கல்யாணி அவனுக்கு நிச்சயம் கிடைப்பாள். இதே நினைவில் தன் வீட்டிற்கும் போகாமல், நேராக வேலுத்தேவன் வீட்டிற்கே சென்றான்.

அப்போதுதான் வேலுத்தேவன் மற்றொரு திசையிலிருந்து வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். அன்று மாயாண்டியிடம் சொன்ன பிறகு, தான் சொன்னதையே மறந்துவிட்டான் வேலுத்தேவன். அத்துடன் அவனுக்கு அவநம்பிக்கைவேறு ஏற்பட்டிருந்தது. வெள்ளைக்காரர்களின் துப்பாக்கியை யாராலும் திருட முடியாது என்பதே அது. அதனால் மாயாண்டியைப் பற்றி மறந்துவிட்டான்.

இப்போது இருவரும் வழியில் சந்தித்தனர், "மாமா!" என்று கூவினான் மாயாண்டி! "வாப்பா மாயாண்டி! கையிலே என்ன?" என்று கேட்டான் வேலுத்தேவன். "கல்யாணிக்குப் பரிசப்பணம் தரணுமுல்ல. அதுக்குப் பதிலாத்தான் இது" என்று சொல்லிக்கொண்டே துப்பாக்கிகள் இரண்டை அவன் பாதங்களில் வைத்தான் மாயாண்டி.

வேலுத்தேவன் ஆச்சரியத்தில் மூழ்கினான். தான் காண்பது கனவோ என்று சந்தேகப்பட்டான். ஆம்! உண்மைதான். அவன் கனவு நனவாகிவிட்டது. மாயாண்டியைக் கட்டி அணைத்துக்கொண்டான். "நீதான் சரியான ஆண்பிள்ளை. ஒன்று கேட்டதற்கு இரண்டு கொண்டுவந்து விட்டாயே!" என்றான். மாயாண்டியை வாயார வாழ்த்தினான். "வா வீட்டிற்குப் போகலாம்! கல்யாணியை உனக்கே கலியாணம் செய்துவைக்கிறேன்" என்றான் வேலுத்தேவன். இருவரும் வீடு நோக்கிச் சென்றனர்.

சிறிதுநேரம் இருவரும் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பிறகு வேலுத்தேவன் துப்பாக்கிகளை வீட்டிற்குள் கொண்டு போனான். அதுவரை கல்யாணியைக் காண துடித்துக்கொண்டிருந்த மாயாண்டி உள்ளே எட்டிப்பார்த்தான். ஆனால் கல்யாணியைக் காணவில்லை.

வேலுத்தேவன் வெளியே வந்ததும் "எங்கே மாமா கல்யாணி"? என்று ஆவலோடு கேட்டான் மாயாண்டி. வேலுத்தேவனுக்கு அப்போதுதான் கல்யாணியின் நினைவு எழுந்தது. "ஏ புள்ளே, காளியம்மா! கல்யாணி எங்கே?" என்று கேட்டான் மனைவியிடம் வேலுத்தேவன்.

"அவள் உனக்குத்தானே மத்தியானச் சோறு கொண்டுவந்தா காட்டுக்கு! என்னைக் கேக்குறியே?" என்றாள் காளியம்மாள்.

வேலுத்தேவன் திடுக்கிட்டான். இன்று ஆங்கிலேய வீரர்கள் சிலர், காட்டிலே வேட்டையாடித் திரிந்தார்கள். ஒருவேளை அவர்களிடம் கல்யாணி அகப்பட்டுக்கொண்டால்.?

"மாயாண்டி! வா. ரெண்டு பேரும் காட்டுப்பக்கம் போய்வரலாம். ஏ, காளியம்மா! நாங்க வர்ரதுக்குள்ளே கல்யாணி வந்துட்டா வீட்டுலேஇருக்கச்சொல்லு!" என்று சொல்லிவிட்டு, வழக்கம் போல பழைய துப்பாக்கியை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு புறப்பட்டான் வேலுத்தேவன். மாயாண்டியும்பின் தொடர்ந்தான்.

காட்டின் எல்லையை அடைந்தனர் இருவரும். "டுமீல்" என்ற சப்தமும் "அப்பா!" என்ற பெண் குரலின் கூக்குரலும் தெளிவாகக் கேட்டது. இருவரும் சப்தம் வந்த திக்கில் ஓடினர். மாயாண்டி வேலை பார்த்துவந்த ஜமேதார் ஓடுவதைப் பார்த்தனர். வேலுத்தேவனுக்கு மீசை துடித்தது. துப்பாக்கியை எடுத்து நீட்டினான். விசையை தட்டினான். மறுவினாடியே அந்த ஜமேதார் கீழே விழுந்து பிணமானான்.

பிறகு இருவரும் பெண்குரல் வந்த இடத்திற்குச் சென்றனர். என்ன அலங்கோலம்? கல்யாணி காம வெறிகொண்ட அந்த ஜமேதாரால் - எவனுடைய பூச்சையும்; பொத்தானையும் துடைக்க மாயாண்டி பாடுபட்டானோ அதே ஜமேதாரால் கற்பழிக்கப்பட்டபின் சுடப்பட்டு, இரத்த வெள்ளத்திலே மிதந்து கிடந்தாள்.

சிலம்பு வழங்கும்......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிகாரம் அங்கிலேயை அடைந்து விட்டது, அடைந்து வருகிறது.

புலவர்கள் சிலப்பதிகாரத்தை அறியாத காலத்தில் கூட, புலவருலகம் இராமாயண பாரதச் சேற்றில் புரண்ட காலத்தில் கூட, பொதுமக்கள் எப்படியோ இரண்டாயிர ஆண்டு கடந்தும் மறவாமல் கண்ணகி கதையைத் தெருக்கூத்தாகத் தொடர்ந்து நடத்தி வந்தனர் என்பது இங்கே கவனிக்கத் தக்கது.

இலங்கையில்

'தம்பி'

கிடைக்குமிடம் :

வி. எஸ். முருகன்,

82-3, குமார வீதி,

கொழும்பு.

சிலம்புடன் மறுமலர்ச்சிக்குரிய தொடர்பு

சிலப்பதிகாரத்தின் முதற் பதிப்பு வெளிவந்தது 1892ல் தான். அதை அருமுயற்சியால் வெளிக் கொணர்ந்தவர் முனைவர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள். அப்பதிப்பு மீண்டும் 1920, 1927, 1944, 1950 ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்து மறு பதிப்புக்களாக வெளிவந்தன. நான்காம் பதிப்புக் காலத்துக்குள்ளே வேறு வேறு உரைகள் தாங்கிய பதிப்புக்கள் - நாவலர் வேங்கடசாமி நாட்டார், தமிழகப் பெரியார் ஆர். கே. சண்முகம் ஆகியவர்கள் உரைப் பதிப்புக்களும் வெளிவந்தன. சிலப்பதிகாரத்தின் செல்வாக்கு வளர்ந்த வளர்ச்சியில் விசையினை இப்புள்ளி விபரங்கள் காட்டும். இவற்றுடன் சங்க இலக்கியப் பகுதிகளிலே முற்பட வெளியிடப்பட்ட புறநானூறு, பத்துப்பாட்டு ஆகியவற்றின் பதிப்பு விபரங்களை ஒப்பிட்டுக் காணுதல் பயன்தரக் கூடும். புறநானூற்றின் பதிப்புக்கள் 1894, 1923, 1935, 1936 ஆகிய ஆண்டுகளிலும், பத்துப்பாட்டு 1889, 1918, 1931, ஆகிய ஆண்டுகளிலும் புதுப்பிக்கப்பட்டன.

சிலப்பதிகாரத்துக்கும் மறுமலர்ச்சிக்கும் உள்ள தொடர்பை இப்புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டும். ஆனால் இவை கூட அதை முழுதும் விளக்க மாட்டா. ஏனென்றால் சிலப்பதிகாரம் வெளிவந்த பின்பும் தமிழக அரசியல் நிலை ஆகியவற்றைப் பொறுத்தே சிலப்பதிகாரம் படிப்படியாக மக்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நிலைகளின் விளக்கமே மறுமலர்ச்சியின் விளக்கமும் வரலாறும் ஆகும்.

(தொடரும்)

சேலம் மே விழாவில் கண்ண...
னும், ஜி. பி. சோமசுந்தரமு...

கல்யாணி புன்னை மரத்தின்மீது சாய்ந்து, ஒருகாலைத் தரையிலும் மற்றொரு காலை பின்பக்கமாக மரத்தின்மீதும் ஊன்றி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய பற்கள் வலதுகையின் ஆள்காட்டி விரலிலுள்ள நகத்தைக் கடித்து ருசித்துக்கொண்டிருந்தன. அவளுடைய மௌன மொழி பேசும் விழிகள் தூரத்தில் சென்று மறையும் ஒற்றையடிப்பாதைமீது லயித்திருந்தன. 'சிலுசிலு' வென்று வீசும் தென்றல் அவளுடைய தலைமயிரின் இரண்டொரு கேசத்தை நெற்றிமீது படியவைத்தன. பக்கத்தில் படர்ந்திருந்த காட்டுமல்லிகையின் மணம் 'கம்'மென்று வீசிக்கொண்டிருந்தது. அவள் நின்றுகொண்டிருந்த புன்னைமரத்திற்குப் பக்கத்தில் பெரிய ஏரியின் கரை இருக்கிறது. அந்தக் கரையின் மறுபுறத்தில் கல்யாணியைப் போன்ற இளம்பெண்கள் குளித்துக்கொண்டும், புடவைகளைத் துவைத்துக் கொண்டும், செப்புக்குடங்களைத் 'தக, தக'வென்று துலக்கிக்கொண்டுமிருந்தனர்.

அவர்கள் நின்ற இடத்திலிருந்து சிறிதுதூரம் தள்ளி ஆடவர்கள் மாடுகளைத் தேய்த்துக்கொண்டும், குளித்துக்கொண்டும், தண்ணீரில் நீந்தி விளையாடிக்கொண்டுமிருந்தனர். ஏரிக்கரைமீது கொஞ்சம் தள்ளி மரங்கள் அடர்ந்திருந்த ஒரு இடத்தில்,வயதானசிலர் வேடிக்கை பார்க்க, இளைஞர்கள் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் ஒற்றையடிப்பாதையில் ஒரு இளைஞன் வேகமாக நடந்து வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் கல்யாணி சுவைத்துக்கொண்டிருந்த விரலை எடுத்துவிட்டு, சுறுசுறுப்புடன் அவனையே கூர்ந்து பார்த்தாள். அவள் முகம் மலர்ந்தது. அவளுடைய உள்ளம் மகிழ்ச்சியால் கூத்தாடியது.

அங்கே வந்துகொண்டிருந்தவன் தான் மாயாண்டித்தேவன். கல்யாணியின் உள்ளத்தைக் கவர்ந்தவன். அவளுடைய ஆசைக்காதலன்.

கல்யாணி காடுகாவல் வேலுத்தேவனின் ஒரே மகள். காடுகாவல் வேலுத்தேவன் என்றால் அந்த வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். அவன் நல்லவனுக்கு நல்லவனாகவும், போக்கிரிக்குப் போக்கிரியாகவும் இருப்பான். வளர்ந்த உருவமும், அகன்ற மார்பும், சிவந்த கண்களும், அடர்ந்த மீசையும் வேலுத்தேவனுக்கு அலாதியான ஒருதோற்றத்தை அளித்தன. கம்பு விளையாட்டிலும் சுடுவதிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவன் அவன். நீண்ட காலமாக காடுகாவல் வேலையிலமர்ந்திருக்கிறான்.

வேலுத்தேவனுக்கு வாழ்க்கையில் நீண்ட நாட்களாக ஒரேயொரு குறை மட்டுமிருந்து வந்தது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்குமுன் செய்யப்பட்ட ஒரு பழைய துப்பாக்கிதான் அவனிடமிருந்தது. சமீபத்தில் மிகவும் சிறந்த முறையில் செய்யப்பட்ட புதிய ரகத் துப்பாக்கிகள் வந்திருப்பதாக அவன் கேள்விப்பட்டான். அதிலும், சமீபத்தில் உள்ள விமானத்திடலைக் காப்பதற்காகவந்துள்ள ஆங்கிலேயராணுவத்தினரிடம் நவீன வசதிகளுள்ள ...ப்பாக்கிகள் இருப்பதாகச் சிலர் ...ன்னார்கள். அம்மாதிரித் ...ாக்கி யொன்றை தான் வாங்கி, ...தல் சுட்டுப் பார்க்கவேண்டு ...பது அவனுடைய தீராதஆசை. ...ப் பலரிடமும் சொல்லியிருக் ... ஆனால் அவனுடைய ஆசை ...நிறைவேறவில்லை சீட்டு ...ாண்டிருந்த இளைஞர் ... வேலுத்தேவனும் சில பெரிய மனிதர்களுடன் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்யாணி தன்னை எதிர்பார்த்துத்தான் மரத்தின் மறைவில் காத்து நிற்கிறாள் என்பது மாயாண்டித் தேவனுக்குத் தெரியும். தூரத்தில் வரும்போதே அவளைப் பார்த்துச் சிரித்தான். அவளும் சிரித்தாள். அருகில் நெருங்கியதும் "நல்ல வேளை நீங்கள் வரமாட்டீங்கன்னு திரும்ப நினைச்சேன்! வந்துட்டீங்க !" என்றாள் கல்யாணி.

"நீ வந்து ரொம்ப நேரமாச்சோ?" என்று கேட்டான் மாயாண்டி.

"இப்பத்தான் வந்தேன்! என்னோடெ வந்தவங்களெல்லாம் கிளம்பப் போறாங்க! அப்புறம் நான் மட்டும் ஒண்டியாஎப்படிப்போறது"?

"நீதான் வேலுத்தேவன் மகளாச்சே! உனக்கென்ன பயம்!"

"ஏ மச்சான்! அதிருக்கட்டும் முதல்லே நம்ப கலியாணத்துக்கு வழியைப் பாரு! எங்க அபபன் குணங்கெட்டவரு! யாருக்காவது சம்மதங் கொடுத்துட்டாருன்னா ஆபத்தாயிடும்!"

கல்யாணியின் எச்சரிக்கையும் உண்மைதான் என்று நினைத்தான் மாயாண்டி. "கேக்க வேண்டியது தான். எத்தனை நாளைக்கித்தான் இப்படி ஒளிவும் மறைவுமா சந்திக்கிறது? ஒருநேரம் இல்லாட்டா இன்னொரு நேரம் ஆபத்தாயிடும்! சரி! உங்க அப்பன் வீட்டிலேயா இருக்காரு?" என்று கேட்டான் மாயாண்டி.



"இல்லே! அதோ ஏரிக்கரையிலே மாமரத்தடியிலே உக்காந்திருக்காரு!" என்றாள் கல்யாணி. "சரி. நான் இப்பவே போய் கேக்குறேன். கல்யாணி! அந்திநேரம்; மல்லிகை வாசம்...கொய்யாப்பழக்கன்னம்... மாட்டேன்னு சொல்லாதே!...... ஒண்ணே ஒண்ணு...ம்..." என்று இழுத்தான். "ஐயையோ! யாராவது பாத்துடுவாங்க! அப்புறம் ஆகட்டும், நீங்க போங்க!" என்று சொல்லிவிட்டு, மான்போல் துள்ளி, கரைக்கு அப்பால் இறங்கிவிட்டாள்.

மாயாண்டி அவள் செல்லும் அழகையும், அதுவரை அவள் கொஞ்சிப் பேசியதையும் நினைத்து மகிழ்ந்தான். ஆகா! எண்ணம் போல் வாழ்க்கையில் கல்யாணி மனைவியாகக் கிடைத்துவிட்டால் அதுவே பெரும் பாக்கியம் என்று நினைத்தான். சரி! எப்படியும் இன்று வேலுத்தேவனிடம் கேட்டு விடுவது என்று முடிவு செய்தான். மனதைத் திடப்படுத்திக்கொண்டு வேலுத்தேவனிடம் சென்றான்.

வேலுத்தேவனுக்குப் பக்கத்தில் மற்றொரு வயதான மனிதரும் உட்கார்ந்திருந்தார். மாயாண்டியைப் பார்த்ததும் "என்னப்பா மாயாண்டி! உன்னைப் பாக்கவே முடியலேயே?" என்றார்.

"இங்கேதான் தாத்தா இருக்கிறேன். வேலை அதிகம்!" என்றான் மாயாண்டி.

"யாரு, மாயாண்டியா? உட்காரு!" என்றான் வேலுத்தேவன்.

"எப்பா! காலா காலத்திலே கலியாணம் காட்சியைப் பண்ணினா என்ன? பேசாமெஇருந்தா காரியம் ஆயிடுமா?" என்றார் அந்த வயதானவர்.

"பண்ணிக்கத்தான் வேணும்! நான் ஒண்டிக்கட்டை; நான் மட்டும் நெனச்சா முடிஞ்சுபோகுமா? உங்களைப்போல பெரிய மனுசா ரெண்டுபேரு எடுப்பெடுத்தா முடியாத காரியமா?" என்றான் மாயாண்டி.

"சரி! பொண்ணு இருக்கிற இடத்தைச் சொல்லு, முடித்து வைக்கிறேன்" என்றார் வயதானவர் நரைத்த மீசையை முறுக்கி விட்டுக்கொண்டே.

மாயாண்டி வேலுத்தேவனைப் பார்த்தான். வேலுத்தேவன் சாந்தமாக, மாயாண்டி சொல்லப் போவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நம்ப மாமா பொண்ணு கலியாணியைத் தான் முடிச்சு வையுங்களேன்!" என்று எப்படியோ சொல்லிவிட்டான் மாயாண்டி. பிறகு இதை வேலுத்தேவனுக்கு முன்னால் எப்படிச் சொன்னோம்; அவ்வளவு துணிவு எங்கிருந்து வந்தது என்பது அவனுக்கேஆச்சரியமாக இருந்தது.

இதைக் கேட்டதும் "அப்படி வா வழிக்கு! மனசிலே இருக்கிறதை திறந்து சொன்னாத்தானே தெரியும்," என்றார் பெரியவர் சிரித்துக் கொண்டே!

வேலுத்தேவன் இச்செய்தியை சிறிதும் எதிர்பாக்கவில்லை. அத்துடன் கல்யாணியை மாயாண்டி போன்ற, துணிச்சலோ, தைரியமோ இல்லாதவர்களுக்குக் கொடுப்பதில் விருப்பமும் இல்லை. அதனால் இப்பேச்சை இத்துடன் தட்டிக் கழிக்க நினைத்து "நீ பெரிய சிப்பாய் பாரு! உனக்குக் கல்யாணியைத்தான் கொடுக்கணும்" என்றான் வேலுத்தேவன்.

"ஏன்! எனக்கென்ன குறைச்சல்? நானும் ஒரு சிப்பாய்தான்!"

"ஆமாம் சிப்பாய்தான். துப்பாக்கி எடுத்துச் சுடத்தான் தெரியாது! டேய்! நீ சரியான ஆம்புளைன்னா, நான் சொல்லுறதைச் செஞ்சுடு! உனக்குக் கல்யாணியைக் கட்டித்தாரேன்" என்றான் வேலுத்தேவன் சிறிது ரோஷத்துடன்.

"ஓ! செய்யத்தயார்! என்ன செய்யணும்?"

"பக்கத்திலே, 'ஏரோப்பிளேன்' திடலிலே, வெள்ளைக்காரங்க நிறைய துப்பாக்கி வைச்சிருக்கா[ங்]களாம். அதிலே ஒண்ணு கொண்டாந்து தந்துரு! கல்யாணியை[க்] கட்டித்தாரேன்!" என்றா[ன்] வேலுத்தேவன்.

கல்யாணியைக் கல்யாண[ம்] செய்துகொள்ளப்போகும் ஆர்வ[த்]தில், முன்பின் யோசியாமல், "சரி[!] கொண்டுவந்து தாரேன்!" என்[றா]ன் மாயாண்டி. வேலுத்தே[வ]னும், பெரியவரும் வியப்படை[ந்]தனர். பெரியவர் அவனைப் பார்த்[து] "டேய்! வெள்ளைக்காரப் பசங்[க] சுட்டுப் பொசுக்கிடுவாங்க. இ[து] உன்னாலே முடியாது" என்றா[ர்].

"தாத்தா! துப்பாக்கி கொண்டாந்து கொடுத்து கல்யாணியைக் கட்டிக்கணும்; இல்லாட்டா அங்கேயே சாகணும்" என்று சொல்லிவிட்டு, வேலுத்தேவனைப் பார்த்து "நான் வர்ரேன் மாமா!" என்றவாறு நடையைக் கட்டினான் மாயாண்டி.

மறுநாள் அதிகாலையில் எழுந்தான். பக்கத்திலுள்ள நகரத்திற்குச் சென்றான். ஒரு 'ஹோட்டலில்' காபி சாப்பிட்டான். அங்கே இந்திய ராணுவ வீரர்கள் நாலைந்து பேர் காபி சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களை அணுகி, "ஐயா! எனக்கு ஏரோப்பிளேன் திடலிலே ஏதாவது வேலை கிடைக்குங்களா?" என்றான் மாயாண்டி. அவர்கள் அவனுடைய பரிதாப நிலையைக் கண்டு சிரித்தார்கள். பிறகு "உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று கேட்டனர். "எந்த வேலை கொடுத்தாலும் செய்கிறேன்" என்றான் மாயாண்டி.

"ஜமேதாரிடம் வந்து கேள்!" என்று சொல்லிவிட்டுப போய்விட்டனர். அவர்களைப் பின்தொடர்ந்து மாயாண்டியும் சென்றான். ஜமேதாரைக் கண்டான். ஆனால் அவனுக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. சுமார் பதினைந்து நாட்கள் வீணாகக் கழிந்தன.

ஒருநாள் அங்கு வேலை செய்து திரும்பிய கூலியாளிடம் தனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா என்று கேட்டான். அவன் சொன்னான். "இங்கே இங்கிலீஷ்காரங்க இருக்கிறாங்க-அவங்க பூட்சையும் பொத்தானையும்பாலிஷ்போடலாமான்னு கேளு!" என்று செல்லிவிட்டுப் போய்விட்டான்.

மாயாண்டிக்கு இச்செய்தி மகிழ்ச்சியளித்தது. பூட்சுக்கு பாலிஷ் போடுவதை முதலில் கற்றுக்கொண்டான். பிறகு துணிவுடன் ஆங்கில வீரர்கள் இருக்குமிடம் சென்றான். அந்த வேலையும் கிடைத்தது.

ஆனால் துப்பாக்கியை எப்படித் திருடுவது? எங்கேயிருக்கிறது துப்பாக்கி? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. துப்பாக்கியில்லாமல் திரும்ப முடியாது. கல்யாணியும் கிடைக்க மாட்டாள்.

க. நாராயணன்

இந்நிலையில் ஒரு மாதம் சென்றது. ஆங்கில ஜமேதாரிடம் வேலை பார்த்த ஒருவன், பதினைந்து நாட்கள் ஓய்வெடுத்துக்கொண்டு ஊர் திரும்ப அனுமதி கேட்டான். ஜமேதார் அனுமதியளித்தான். அவன் வரும்வரை அவனுக்குப் பதிலாக பதினைந்து நாட்களுக்கு வேறு ஆளை அமர்த்திச் செல்லும்படி ஜமேதார் சொன்னான். அந்த வேலையாள் மாயாண்டியை தனக்

(9-ம் பக்கம் பார்க்க)

வெண்பாப் போட்டி

7 பூவைமே லெத்தனைப் பூ!

வெண்பாப்போட்டி 7-ன், பரிசுபெற்ற வெண்பாவும், பிரசுரத்திற்கு தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

முல்லையுங் கோங்கும் முளரிக் குவளையும்
பல்லொடு கொங்கைப் பனிமுகங்கண்--நல்வளத்த
காவையொக் கும்வண்ணக் காரிகை யாமிக்தப்
பூவைமே லெத்தனைப் பூ

—புலவர். கொ. பொன்னுசாமி, அம்மாப்பேட்டை.

★

கற்பும் களிப்பும் கணவனுர்தம் நல்லன்பும்
சுற்றம் வரவேற்கும் சொல்லன்பும்--நற்படிப்பும்
தேவைதான் பாவைக்கு தேவையுண்டோ வேற்றுப்பூ?
பூவைமே லெத்தனைப் பூ!

—வெ. இறையழகன், ஆயக்குடி.

★

அல்லிக் கருங்குவளை யம்புயத்தேன் முல்லைமலர்
நல்லியலாள் தானிழந்தால் நாயகனை--தொல்லுலகம்
தேவையிலா னென்றேதுக்கும்! தாவியணி மாவீரா!
பூவைமே லெத்தனைப் பூ!

—வெ. சாந்த், பழைய ஆயக்குடி.

★

கண்ணே குவளை; கவின்நாசி எள்ளின்பூ;
முன்னும் அதரம் முருக்கம்பூ--எண்ணுமல்
ஆவலாய்ப் பூக்கொய்ய அந்தமுடன் வந்தாளிப்
பூவைமே லெத்தனைப் பூ!

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

மொட்டிமைப் பூஇரண்டு! மொய்குழல்மேல் பூச்செண்டு!
பட்டுப்பூச் சீலை பறப்பதுண்டு!--சொட்டுமெழில்
பாவைக்குத் தான்'கற்பூ'! பாடும் புலவீர்காள்!
பூவைமேல் எத்தனைப் பூ!

—சி. குணசேகரன், திருமங்கலம்.

★

வண்ணமுகம் தாமரைப்பூ; வாய்ப்பற்கள் முல்லைப்பூ;
வெண்ணிறத்து மேனி மகிழம்பூ--பெண்ணிவட்கு
மேவுமூக்(கு) எள்ளுப்பூ; மைக்கண் குவளைப்பூ
பூவைமே லெத்தனைப் பூ!

—கே. சீனுவாசன், செங்கல்பட்டு.

★

இற்றுவிழப் போகும் இளங்கொடி போன்றஇடை
பெற்றுள பாரந்தான் பற்றுதோ?--முற்றிருள்
மாமை புனைந்திருக்கும் வார்குழற் பின்னலின்
பூவைமே லெத்தனைப் பூ!

—இரெ. தங்கையா. பி. ஏ., திருமங்கலம்.

★

கன்னடம்தெ லுங்குமலை யாளம் களிதுளுவென்(று)
இன்ன பலமொழிகள் ஈந்திங்கு--கன்னலின்
தாவில் சுவைசேர்ந்த தன்னிகரில் செந்தமிழாம்
பூவைமே லெத்தனைப் பூ!

—நரசிம்மன், சிருவாக்கூர்.

★

சங்குக் கழுத்தனைய, செம்பவழ வாயனைய
கொங்கை யழகுறுநற் கோதையரின்--துங்கமுறும்
சேவையளித் தாடவர்க்குச் சேய்களினை ஈனுகின்ற
பூவைமே லெத்தனைப் பூ!

—வெண்ணெய் வேலன், திருவெண்ணெய் நல்லூர்.

அன்னத்தின் தூவி, அனிச்சமும்தான் மண்ணுலகில்
மன்னத்தின் ஒன்றுபட்ட மாண்புசேர்--ஏந்தலரே!
பாவை அடிக்கு பழம்நெருஞ்சி என்றதால்
பூவைமே லெத்தனைப் பூ!

—ம. சுந்தர இராமானுஜம், மதுரை.

★

கண்ணே கருங்குவளை கைவிரல்கள் காந்தட்பூ
வண்டார்க்கும் முல்லை வனப்பற்கள்--தண்மலர்சூழ்
காவை நிகர்த்த கனிமுகமாம் அம்மம்ம!
பூவைமே லெத்தனைப் பூ!

—முருகு, வரகூர்.

★

முல்லைப்பூ பற்கள் முகவொளிசெச் தாமரைப்பூ
எள்ளுப்பூ நாசி எழில்பூப்பு--நல்லணங்கு
பாவைத் திருமணப்பூ(ப்) பந்தலுக்கு வந்தமணப்
பூவைமே லெத்தனைப் பூ!

—அன்புதாசன், கோவை.

★

கொழுநற் றொழுதுக் கொடையிற் சிறந்து
வழுவிலா வாய்மை வளர்த்து--அழகுடன்
பாவையர் பண்பாம் பயிர்ப்பொடுவாழ் நற்றமிழ்ப்
பூவைமே லெத்தனைப் பூ!

—இரா. கலியாணசுந்தரம், வலங்கைமான்.

★

இன்னல் இருந்தாலும் இன்பமுடன் இல்வாழ்வில்
அன்பு மொழியால் அரவணைத்து--மின்னலெனத்
தேவை யறிந்துநற் சேவை புரிகின்ற
பூவைமே லெத்தனைப் பூ!

—எஸ். குமரன், அருப்புக்கோட்டை.

★

மின்னல் ஒளியரும்போ? முத்தமிழ்ப் பொன்னரும்போ?
கன்னல் தமிழரும்போ? கானருவிப்--பண்ணரும்போ?
காவைத் திருக்கும் கலைமேனி கண்டதுண்டோ?
பூவைமே லெத்தனைப் பூ!

—ஆதி. சானகிராமன், விழுப்புரம்.

★

அனிச்சமது நல்லஇடை; அன்புமுல்லை பற்கள்;
கனிவுநிறைக் காந்தளதே கண்கள்--இனித்தமொழிப்
பாவை முகம்முளரி; பைங்குழலி ஆம்பூக்கள்,
பூவைமே லெத்தனைப் பூ!

—சிதம்பர. வேங்கடாசலம், அரியக்குடி.

★

முல்லைச் சிரிப்பு முகிழ்ந்திருக்கும், கண்குவளை,
மல்லிகைப்பல், ரோசா வதனத்தாள்;--அல்லிமலர்ப்
பாவையாம் செங்கமலப் பாதத்தால், கண்டுகொண்டேன்
பூவைமே லெத்தனைப் பூ!

—சங்கமணி, பொள்ளாச்சி.

★

கண்ணே குவளை முகமே கமலமலர்
பண்ணே இசையாயிற் பல்மல்லி--திண்முலை
பாவையின் கையேநற் காந்தள் எனவடுக்க
பூவைமே லெத்தனைப் பூ!

—ஆர். ஆர். தாஸ், திண்டிவனம்.

★

கண்முத லைம்புலன் கன்னிப் பருவமும்
ஒண்மலரே; உன்மெய் யனிச்சமே;--கண்மணியே!
சாவையா னெய்தினுஞ் சாற்றுவேன் காதற்பூ
பூவைமே லெத்தனைப் பூ!

—சு. திருநாவுக்கரசு, மாம்பாக்கம்.

★

காதல் மொழிபேசும் கண்கள் கருநீலம்
சீதத் திருக்கரங்கள் செங்காந்தள்--சீதமுல்லை
பாவை எழிற்பற்கள் பால்வதனப் பங்கயமாம்
பூவைமே லெத்தனைப் பூ!

—இல. அரவரசன் (தமிழாசிரியர்) இராமநாதபுரம்.

★

பூவையாள் தன்னிடத்தில் பொன்னனையான் வந்திட்டே
பாவையாள் பல்பூக்கள் தாவென்றாள்--காவடைந்து
கோவைநல் முல்லைகாந்தள் செங்குமுதம் பெய்திட்டான்
பூவைமே லெத்தனைப் பூ!

—அரு. கோவிந்தன், ஆசிரியர், கண்



பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.எல்.டி.

பதில் தருகிறார்

சீனிவாசன். சென்னை,

"சிலையுரு 'அழிதரச் செறிந்த மார்பில் தன் முலையுருவின என முதுகை நோக்கிடும்" என்ற பாடலின் கருத்தமைந்த பாடலை வேறொரு நூலில் வேறோர் ஆசிரியர் பாடியுள்ளார். அந்நூல் யாது? ஆசிரியர் பெயர் யாது?

குறித்த பாட்டு கம்பராமாயணம் பாலகாண்டம் உண்டாட்டுப் படலத்தில் (62) உள்ளது. இதே கருத்துடைய பாட்டு விவேக சிந்தாமணியிலும் உள்ளது.

துப்புறச் சிவந்த வாயாள்
தூய பஞ்சணையின்மீது
ஒப்புறக் கணவனோடே
ஓர் லீலை செய்யும்போது
கற்பகஞ் சேர்ந்த மார்பில்கனதனம்
இரண்டுர் தைத்தே
அப்புறம் உருவிற் றென்றே
அங்கையால் தடவிப் பார்த்தாள்

புருடோத்தமன், சென்னை.

குபேரன் திராவிடனா?

குபேரன் கந்தருவ வேந்தன். சமணர்கள் திராவிடர்களைக் கந்தருவரென்று குறித்ததுண்டு. ஆனால் ஆரியபுராணப்படி அவனைத் திராவிடன் என்று கூறுவதில் பொருளில்லை, ஆரிய புராணங்கள் அத்தனையும் கற்பனையில்கூட பொருந்தாக் கற்பனைகளாதலால்.

ஆ. சீனிவாசன், திண்டுக்கல்.

அகில இந்திய வானொலியில் 'ஆகாஷ வாணி' என்றும், தமிழ் செய்தியில் 'மக்கள் சபை' என்பதற்குப் பதிலாக 'லோக் சபா' வென்றும் தமிழில் கூறுகிறார்களே, இது அவர்களது அறியாமையா? அல்லது மேலிடத்து உத்தரவா? இதைக் கண்டிக்க வழி இல்லையா?

'ஆகாஷவாணி,' 'லோக்சபா' என்பவை இந்தியாவின் எல்லாத் தாய்மொழிகளுக்கும் பொதுவான கலைச்சொற்களாக இந்திவாணர் தொகுத்து அரசியலார் ஏற்றுக்கொண்ட சொற்கள். தமிழில் அதை வழங்குவது அறியாமையாலல்ல: தமிழர் பண்பு, தனித்தன்மை ஆகியவற்றை இன்றைய அரசியலார் அறியாததனாலும், அதை மதியாதவர்கள் அரசியல் துறையில் இருப்பதினாலும் தமிழ்ப் பொதுமக்கள் கவனியாமையினாலும், இவற்றையெல்லாம் புகுத்திவிடச் சிலர் முயல்கின்றனர். இம்முயற்சி வெற்றி பெறப்போவதில்லை. ஆனாலும் அதனால் திராவிட நாட்டுப் பிரிவினையுணர்ச்சி தமிழ் ஆர்வலர்களிடையே வளர இடமேற்படுகிறது.

சிவகுருநாதன், சுந்தராபுரம்.

ஷேக்ஸ்பியரைசெகப்பிரியர் எனக் கூறுவது தவறு எனத் தாங்கள் குறிப்பிட்டீர்கள். ஆனால் இரா. நெடுஞ்செழியன் செகப்பிரியர் என அழைப்பது சரி என்று இலங்கை சென்றபோதும், மன்றத்திலும் கூறியுள்ளார்? இதை உம்மால் மறுக்கமுடியுமா?

மறுக்கவேண்டியதில்லை அன்பரே! வெறும் கருத்து வேற்றுமை. அடிப்படைக் கருத்து மாறுபாடோ முரண்பாடோ அல்ல. தூய தமிழ்ப் பண்பைப் பேணும் கட்டுப்பாடுடைய இருஅறிஞர்கள் வகுத்துக்கொண்ட இரு வேறு பண்பாட்டு எல்லை வேலிகளே இரு கருத்துக்களும்.

அறிவண்ணல் சென்னை 2.

(1) இலக்கியச்சுவை நுகர எனக்கு பெரிதும் ஆவல்! ஆகையால் எளிய முறையில் நல்ல இலக்கியப் பயனை அடைய நல்லதோர் ஊன்றுகோலாய் உதவும் இலக்கிய நூல் ஒன்றைச் சொல்வீர்களா?

தமிழ் இலக்கியத்தை பெரும்பாலும் இன்றைய இலக்கியத்திலிருந்து பின்னோக்கிக் கற்பது இலக்கியச் சுவை நுகர்வதற்கு பேருதவி ஆகும். எந்த நூல்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்பது படிப்பவர் சுவையைப் பொறுத்தது. எப்படியும் பாரதி. பாரதிதாசன் பாடல்கள், அதற்குமுன் உள்ள சித்தர் பாடல்கள், குற்றாலக் குறவஞ்சி, இடைக்காலத்தே மூவருலா, கலிங்கத்துப்பரணி, சிந்தாமணி, பக்தி நூல்களில் திருநாளாயிரம், திருவாசகம், திருக்கோவையார், பண்டைக்காலத்தியசிலப்பதிகாரம், கலித்தொகை, பரிபாடல், திருக்குறள் இவை நல்லபடி முறை ஆகலாம்.

(2) கவிதைப் புலமை அடைய செய்ய வேண்டியவைகள் என்னென்ன என்பதை நவிலவும்? இலக்கிய வரம்போடு கவிதை அமைத்தால் கடினமல்லவா? ஆகையால் எளிய முறையில் இனிய கவிதை அமைக்க எது சிறந்தவழி? தயவுசெய்து விளக்கிக் கூறவும்.

கவிதை இலக்கணம் அதாவது யாப்பிலக்கணம் ஓரளவு நல்ல கவிதை அமைப்பைச் சுட்டிக்காட்ட உதவும். ஆனால் நல்ல கவிதையை வாசித்து நுகர்வதுதான் கவிதைப் புலமை அடைய நல்லவழி. நாவில் அதன் ஓசையையும் செவியில் அதன் சுவையையும் அளந்தறிந்த பின் இலக்கணம் இல்லாமலே நல்ல பாட்டு பண்பு வர வழியுண்டு. சில சமயம் இலக்கண வரம்பு மீறினால்கூட,செவிச்சுவைக்கு ஒத்ததானால் கேடில்லை. உண்மையில் தமிழ் இலக்கணம் முற்காலக் கவிதைக்குத்தான் இலக்கணமே அன்றி இக்காலக் கவிதைக்கு அல்ல. முற்காலத்திலும், இயலுக்கன்றி இசை நாடகங்களுக்குஅல்ல. ஆயினும் கவிதைச் சுவை ஏற்படும் வரையிலும்இலக்கணம்வழிகாட்டி. அதன் பின்னும் அது கவிதையின் தன்மை மிகவும் திரிந்துவிடாமல் காக்கும் ஒரு உள்வேலி.

ஐ. பிச்சை, மணப்பாறை.

தமிழ் வளர்க்கிறோம்; தாய் மொழிக்கு பங்கம் ஏற்படுவதா? தடுக்காமல் நாம் இருப்பதா? என்று ஏதேதோ எழுதுகிறீர்கள்! இல்லை! பேசுகிறீர்கள். ஆனால், அதன்படி தூயதமிழில் எழுத அச்சகம் மறுத்து வடமொழி எழுத்துக்களை வாரி வீசுகிறதே ஏன்?

தனித்தமிழ் ஒரு நோக்கம்தான். புதிய எழுத்தாளர், பத்திரிகை எழுத்தாளர் கூடிய மட்டும் தனித்தமிழ் எழுதமுடியுமே தவிர,அதற்காகப் புரியாத் தமிழில் எழுத முடியாது. எழுதினால் நோக்கம் வெற்றி பெறவும் செய்யாது. சில இடங்களில் விளக்கமும் ஏற்படாது. உணர்ச்சியும் குறைந்துவிடும். எடுத்துக்காட்டாக 'அரசியல்' என்ற தனித்தமிழ்ச் சொல்லை 'அரசாங்கம்' அல்லது 'சர்க்கார்' என்பதற்கும் அரசியல் துறை என்பதற்கும் அரசு (State) வழங்கினால் அறிஞரே குழப்பமடைவர். பொது மக்களுக்கு எதுவும் புரியாது. அதுபோலவே ஜனநாயகம், குடியரசு என்ற இரண்டு கருத்துக்களையும் குடியாட்சி என்ற சொல் குறிக்கும்.

இவ்வகையில் எழுதுபவர் நோக்கந்தான் முக்கியமே தவிர, வகுத்துக்கொண்ட எல்லை வகை முறை முக்கியமல்ல. சிலர் தீவிர தனித்தமிழ் எழுதி முன்னணியில் நின்று வழி காட்டுகின்றனர். சிலர் கூடிய மட்டும் தனித்தமிழில் எளியநடையில் எழுதி அதைப் பரப்புகின்றனர். தனித்தமிழ் என்ற எண்ணம் இல்லாமலே நல்ல இலக்கியப்பண்பு தோய்ந்த காரணத்தால் தம்மையறியாமல் தனித்தமிழ் எழுதுபவரும் தனித்தமிழ் வேண்டாமென்று கூறிக்கொண்டே தனித்தமிழ் இயக்க வயப்பட்டு தனித்தமிழ் எழுதியவரும் பேசியவரும் உண்டு. காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாண சுந்தரனார் ஒரு எடுத்துக்காட்டு.

சௌந்தர பாண்டியன் (நெடுமாறன்) காலத்து அவருக்கு சுர நோய் பிடித்துக்கொண்டதாகவும், அது சமணமத ஆட்களால் தீர்க்க முடியாது சைவமதத் திருஞான சம்பந்தரால்தான் முடிந்தது, நோய் தீர்க்கப்பட்டது என்றும் வரலாறு வரையப்பட்டுள்ளதே அதன் மர்மம் யாது?

இது வரலாறு அல்ல, அன்பரே! வரலாறு சார்ந்த சமயவாதிகள் கூற்று. அதில் இரு திறத்தார் கூற்றுக்களும் நமக்கு முழுவதும் வந்து எட்டவில்லை. முழு உண்மையும் இன்று வரையறுக்கவும் முடியவில்லை. இதில் அரசியல் மாறுபாடும் சமய மாறுபாடும் கலந்துள்ளன.

பிரதிவாதியே சொல்கிறார்

திராவிட நாகரீகம் வேறு, ஆரிய நாகரீகம் வேறு என்று எத்தனை முறை எடுத்துரைத்தும் துரைத்தனத்தார் ஏற்றுக்கொள்வதில்லை, அவைகளெல்லாம் இரண்டறக்கலந்து விட்டதென்கின்றனர், உண்மையாகவே இருந்தாலும் வாதியின் வாக்குமூலத்தை எப்போதும் பிரதிவாதிகள் நம்புவதில்லைதான். ஆனால் பிரதிவாதிகளில் ஒருவரே கூறுகிறார்; அதையே வாதியாகிய நாங்கள் நினைவுபடுத்துகிறோம்.

"தற்பொழுது சமஸ்கிருதத்தில் உபயோகிக்கப்படும் நூற்றுக்கணக்கான வார்த்தைகள் திராவிட பாஷைகளிலிருந்து உருவாகியிருக்கின்றன. தமிழ் இலக்கியமும் தமிழ் கலையும் இந்தியக் இலக்கியத்தையும் இந்திய கலையையும் பல வகைகளில் வளம் பெறச் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றன. இந்த உண்மையை பல சந்தர்ப்பங்களில் நான் இடித்துக் கூறியிருக்கிறேன். இப்பொழுதும் கூறுகிறேன்."

மொஹஞ்சோதரோ குகைகளில் செதுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளும் லிபியும் புராதன திராவிட கலையிலிருந்தும் இலக்கியத்திலிருந்தும் எடுக்கப்பட்டிருப்பதாக ஒரு அயல் நாட்டு அறிஞர் கூறியுள்ள அபிப்பிராயத்தை நான் ஆதரிக்கிறேன்.

திராவிடபாஷையிலிருந்து எடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வார்த்தைகளின் சரித்திரத்தைப் பற்றி இதுவரை இந்தியாவில் எந்த சர்வகலாசாலையும் தீவிரமாக ஆராய்ச்சி நடத்தப்படவில்லை.

- அரிகிருஷ்ண மேதாப்
பம்பாய் கவர்னர்.
தினமணி 8-5-55

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14..